Reg. No. M. 1434. தனிப்பிரதி அணா 0—1—6

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

# நாடார்குலமித்திரன்

# THE NADAR KULA MITRAN

நாடார்குலமித்திரன் சந்தா விபரம்.

இந்தியா, பர்மா, சிலோன் முதலிய உள்நாட்டிற்கு வருடம் 1-க்கு ரூ 4-0-0.
சிங்கப்பூர், பினாங்கு, மலாக்கா முதலிய வெளிநாட்டிற்கு வருடம் 1-க்கு ரூபா 5-0-0.

திங்கட்கிழமை தோறும் வெளிவரும்

வாரப் பதிப்பு.

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்" (திருக்குறள்)

சுதந்திரம்! சமத்துவம்!! சகோதரத்வம்!!!

சு. ஆ. முத்துநாடார் பத்திராசிரியர்

நாடார்குலமித்திரன் விளம்பர விகிதம்.

கலம் 1-க்கு தடவை 1-க்கு ரூபா 8-0-0.
சில்லரை விளம்பரம் அங்குலம் 1-க்கு ரூ 0-8-0
நீண்டகாலம் விளம்பரஞ் செய்வோர் மானேஜருக்கு எழுதவும்.

8 | கலியப்தம் ௫௰௨௭ அக்ஷய ௵ ஆவணி ௴ ௭ ௳ திங்கட்கிழமை 1926 ௵ ஆகஸ்டு ௴ 23 ௳ | இதழ் 1

வெடிக்காரத்தைலம் என்ற

## சர்வஜன்னி நிவாரணத் தைலம்.

உலகப்பிரசித்தி பெற்ற நமது சர்வஜன்னி நிவாரணத்தைலம்சாஸ்திர ஆராய்ச்சியின்படி கிடைக்கிறதற்கு அருமையானதும், சிலாக்கியமானதுமான மூலிகைகளினாலும் விலையுயர்ந்த கடைச் சரக்குகளினாலும் தயாரிக்கப்பட்டது. இத்தைலம் நமது குடும்பத்தில் சுமார் 75 வருஷகாலமாக பரம்பரையாக கையாளப்பட்டு வருகிறது. சுமார் 30 மைல் சுற்றளவுள்ள கிராமவாசிகளுக்கு நமது தைலத்தின் அருமை பெருமை தெரிந்து சிலாக்கியமாக உபயோகப்படுத்தி வருகிறார்கள். மேலும் விருதுநகர், மதுரை திருநெல்வேலி, கொழும்பு, ரங்கூன் முதலான இடங்களிலும் நமது தைலம் பரவியிருக்கிறது.

இத்தைலத்தின் அருமையான குணங்களாவன:— சிசுக்களுக்கு மாந்தம் வலிப்பு, கிருமிப் பூச்சி, இளைப்பு, பிரசவகாலத்தில் ஜன்னி முதலானவைகளுக்கும் மற்றும் இருபாலர்களுக்கும்; மந்தாரகாசம், க்ஷயம், கை, கால் உளைதல், பிடரிவலி முதலியவைகளுக்கு இன்றியமையாத தைலம். இதை ஒருதடவை உபயோகித்தால் இதன் அருமைபெருமைகள் நன்கு விளங்கும். சால்தர் காலங்களில் கெண்டைவலிப்பு, ஜன்னி முதலியவைகளுக்கு சிறந்த சஞ்சிவித்தைலம்.

ஒரு அவுன்ஸ் புட்டி விலை ரூ 0—5—0

உபயோகிக்கும் விதம் முதலானவைகள் புட்டியுடன் அனுப்பப்படும்.

சோ. க. கா. முகம்மதுஇஸ்லாம் ராவுத்தர்
சின்னப்புளியம்பட்டி கல்லூர்
அருப்புக்கோட்டை.

## நாடார்பாங்குலிமிட்டெட், தூத்துக்குடி.

## விசேஷ வட்டி.

"நாடார் பாங்கு லிமிட்டெட்டில் ஒரு வருஷத்துக்குக் குறையாமல் தவணைக்குப் போடும் தொகைக்கு வருஷம் ஒன்றுக்கு ரூபாய் நூறுக்கு ரூ 6 வீதமும், இரண்டு வருஷத்திற்கும் அதற்கு மேற்பட்ட காலத்திற்கும் போடும் தொகைக்கு வருஷம் ஒன்றுக்கு ரூபாய் நூறுக்கு ரூ 6½ வீதம் வட்டி கொடுக்கப்படும்."

விசேஷமாய் மைனர்கள்; விதவைகள், பள்ளிக்கூடங்கள், பேட்டைகள் மகமை முதலிய பொது ஸ்தாபனங்களின் பணத்தை பந்தோபஸ்தாயும் நல்லவட்டியிலும் வைப்பதற்கு இதுவே ஏற்றஇடம். அவரவர்களுக்கு வேண்டிய பிரகாரம் மைனர்கள்; கார்டியன்கள்; அல்லது காரியதரிசிகள், பெயரால் கணக்குவைத்து யாரிடம்வட்டியும் முதலும் கொடுக்க விருப்பமோ அவ்விதம்கொடுக்க ஒழுங்கு செய்து கொள்ளலாம்.

மற்றும் விபரங்களைப்பற்றி ஏஜெண்டுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

No. 1.
பட்டணம் பொடி

உலகெங்கும் புகழ் பெற்று

24 தங்க மெடல்கள் பரிசு பெற்ற

மதராஸ்

என். வி. ஷண்முகம் கம்பெனியார்

தந்தி விலாசம்
'மூக்குத் தூள்'
தபால் பெட்டி
நெ. 55.5
மதராஸ்.

# பட்டணம் பொடி

காரம், மணம், குணம், நிறம், வாடை கமழ்கின்றன.
ஒவ்வொரு இந்தியரின் மனத்தையும் குதூகலிக்கச் செய்கிறது.
மாரிகாலத்துக்கு ஏற்றவாறு காரம் மணம் தரும்படி தயாரிக்கப்படுகிறது.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



# மெய்வாழ்க்கை கண்டறிந்த வேந்தன்

## புத்தர் ஞானம்.

(முருகதாஸன் எழுதுகிறார்)

இன்றைக்கு இரண்டாயிரத்து ஐந்நூறு வருஷங்களுக்கு முன் இந்திய வட பாரிசம் ஹிமாலயத்திற்கு பக்கத்தேயுள்ள கபிலவாஸ்து என்னும் நகரத்தில் க்ஷத்திரியச் சக்கரவர்த்தியின் திருக் குமாரன் ஸித்தார்த்தன் (புத்தன்) எனும் இளவரசன் பால்யத்தில் படித்துணர்ந்து மெய்வாழ்க்கை கண்டபிடித்த விசித்திரத்தைப் படிக்கப் படிக்கத் தெவிட்டாத தென்னமுதாயுள்ளது. மாயப்பிரபஞ்சத்தில் பொய்த் தோற்றத்தைக் கண்டு மகிழ்ந்துழலும் மக்களுக்கு அவரது புத்தர் வாழ்க்கையின் சாரம் நல்ல ஞானத்தைக் கொடுக்குமென்று சிற்சில பாகத்தை எடுத்தெழுதுகின்றோம்.

ஸித்தார்த்தன் எட்டு வயதுக்குப் பின் விசுவாமித்திரன் என்பவரிடம் சகல கல்வியும் கற்றுணர்ந்தார். அவருக்கு கருணை யென்பது பிறவியிலே அமைந்து அவருடைய வாழ்க்கையை பரிசுத்தப்படுத்தியது. க்ஷத்திரிய தர்மப்படி அவர் வேட்டையாடச் சென்றால் வேட்டையாடும்போதே பிராணிகளின் பரிதாபத்தைக் கண்டு நின்று விடுவார். பந்தயக் குதிரைகள் பெருமூச்சு விடுவதைக் கண்டு வருந்தப்புவார்.

இப்படி இருக்கையில் ஒரு நாள் தம் தோட்டத்தில் வசந்த காலத்தில் தனியாக உட்கார்ந்திருந்தார். அப்பொழுது அநேக அன்னங்கள் கூட்டமாக ஹிமாலய பர்வதத்தின் உச்சியில் தாங்கள் கட்டியிருக்கும் கூடுகளுக்கு வடக்கு முகமாக நோக்கிப் பறந்து போய்க்கொண்டிருந்தன. கூடுகளிலுள்ள குஞ்சுகளின் ஆசையால் இழுக்கப்பட்டு அந்நியோன்யமாகச் சேர்ந்து தம் பாஷையில் ஒன்றுக்கொன்று பேசிக்கொண்டு தமது நிர்மலமான இறக்கைகளை விரித்துப் பறந்து போகையில் நமது இளவரசரின் (புத்தரின்) அத்தானுகிய தேவதத்தனென்பவன் தனது வில்லை வளைத்துக் குறிபார்த்து நீலமான ஆகாயத்தில் பறந்து போவதற்காக விரிக்கப்பட்ட சிறகுகளை இலக்குவைத்து ஒரு அன்னத்தின் மீது அம்பை விட்டான். அவ்வம்பு தைத்தவுடனே அவ்வன்னமானது தாழ்த்துக்கொண்டு இரத்தம் பீரிட்டு சிறகுகளெல்லாம் செவ்விரத்தமாய் நனைந்து இளவரசன் சமீபத்தில் வந்து விழுந்தது. உடனே அவர் அதை எடுத்து தன் கையால் தடவி அதன் பயத்தை ஒழித்து மற்றொரு கையால் அம்பை மெதுவாய்ப் பிடுங்கி அப்புண்ணின் மேல் மெல்லிய இலைகளை வைத்துக் கட்டி வலியை ஆற்றினார். வருத்தம் யாதென்றறியாத நமது இளவரசர் அவ்வம்பை எடுத்து தம் கையில் குத்திப் பார்த்தார். அதனால் தமக்குண்டான நோவைச் சகிக்க முடியாமல் பக்ஷியைப் பார்த்து கண்ணீர் விட்டு பக்ஷியை தேற்றவாரம்பித்தார்.

அப்போது ஒரு வேலைக்காரன் வந்து தேவதத்தன் பக்ஷியை வாங்கி வரும்படி சொன்னதாகப் பிரார்த்தித்தான். அதற்கு இளவரசர் பக்ஷி இறந்திருந்தால் அதைக் கொன்றவரிடம் கொடுத்து விடலாம். அதன் வேகத்தைக் கொன்றாரே யொழிய அதைக் கொல்லவில்லை என்று சொல்லியனுப்பினார். இதைக் கேட்ட தேவதத்தன் நேராகவே வந்து பக்ஷி இறந்தாலும், இறக்காவிடினும் என்னுடையதென்று வாதித்தார். அதற்கு இளவரசர் அதைக் காப்பாற்றினவன் நானாகையால் அது என்னைச் சேர்ந்ததென்று வாதித்தார். பின் இருவரும் மத்தியஸ்தத்திற்காக ஒருவரைத் தேடிச் செல்லும்போது வழியில் ஒரு பெரியவர் அகப்பட்டார். அவரிடம் இருவர் வழக்கைச் சொல்லவே அவர் ஜீவனென்பது விலையுள்ளதானால் ஜீவனை அழிக்க வழிதேடினவனைப் பார்க்கிலும் அதைக் காப்பாற்ற வழிதேடினவனே அதற்குரியவன்; கொல்லுகிறவன் அழிக்கப்பார்க்கிறான்; காப்பாற்றுகிறவன் வளர்க்கப்பார்க்கிறான்; ஆகையால் பக்ஷி இளவரசனிடமிருந்து சுகமான பின் தன்னினத்தைப் போயடைய வேண்டியதென்றார். அப்பொழுது இளவரசர் வருத்தமின்னதென அறிந்தார்.

ஒரு நாள் அவர் தகப்பனார் இனிமையான வசந்த காலத்தில் பூமியானது தன்னிடத்துள்ள திரவியங்களை அகைப்பவனுக்குக் கொடுக்கும்படியாக எப்படி க்ருஷித் தொழில் செய்யப்படுகிறதென்பதையும், எனக்குப் பின் உனக்கு வருகிற இவ்விராஜ்யமானது எப்படி அதிலுள்ள ஜனங்களையும் போஷித்து நமது பொக்கிஷத்தை நிரப்புகிறதென்பதையும் பார்க்க வேண்டாமா? இக்காலம் வெகு இனிமையாகவிருக்குமெனவே ஆமென விசைந்து இருவரும் சென்றார்கள். அப்போது காளைகள் தமது பலமான தோள்களால் கலப்பைகளை இழுத்துக்கொண்டு போவதையும், அக்கலப்பைகள் கீறிச் சென்ற நிலத்தைப் பிரிக்கையில் நிலமானது நீண்ட அலைகள் போல சுருளுவதையும், உழுவோர் கலப்பையின் கொழு நிலத்தில் நன்றாய்ப் பாய கலப்பையை நன்றாய் மிதித்துக் கொண்டு பாடுவதையும் இளவரசர் கண்டு களித்தார். போகிற இடமெல்லாம் பச்சையாயும், நீர்வாய்க்கால்களும், தென்னந்தோப்புகளும் கண்டும், பக்ஷிக்கூட்டங்களும், வண்டுகளும், தேனீக்களும் சப்தம் செய்து கொண்டிருந்ததைக் கேட்டும் களித்தார். மேலும் மயில், குயில், மாடப்புறாக்கள் விசேஷித்திருந்தன. அரத்தில் ஏதோ கலியாணத்திற்காக நாட்டு மத்தளங்களடித்தவுடன் இதையெல்லாம் இளவரசர் கண்டும் கேட்டும் சந்தோஷித்தார். ஆயினும்,

ஆழ்ந்து நோக்கும்பொழுது இந்த ரோஜா மலர்போலும் இனிதாகக் காணப்படும் வாழ்க்கையில் அதன் முட்களைப்போல் துன்பங்கள் ஒளிந்திருக்கக் கண்டார். குடியானவன் சம்பளத்திற்காக நெற்றி நீர் நிலத்தில் வடிய வேலை செய்வதையும், கடுமையாய் எரிகிற வெயிலில் காளைகளை ஓட்டுவதற்காக சூரிய பட்டம்போற் பிரகாசிக்கும் உடம்பில் தார்க்கோலால் குத்திப் புண்ணாக்குவதையும், பல்லிகள் எறும்புகளைத் தின்பதையும், பாம்பு பல்லியைத் தின்பதையும், இவ்விரண்டையும் பருந்துகள் தின்பதையும், ஒன்றையொன்று தின்று வாழ்வதையும், ஜீவிக்கின்ற வஸ்துக்களெல்லாம் மற்றவைகளின் மரணத்தினாலேயே பிழைப்பதையும் பார்த்தார். இந்த அழகான வெளிப்பார்வையானது உள்ளே எறும்பு முதல் தன் அயலானைக் கொல்லுகிற மனிதன்வரையில் உள்ள பிராணிகளெல்லாம் ஒன்றையொன்று கொலை செய்து பிழைக்கிற ஒரு பெரிய பயங்கரமான இயந்திரத்தை மறைத்து வைத்திருந்தது. இவ்விதம் பசியால் வருந்தும் உழவோனையும், நுகக் கால் பட்டுப் பட்டுப் புண்ணாயிருக்கிற கழுத்துகளையுடைய காளைகளையும், வாழ்வை ஒரு ஓயாச் சண்டையாக்கும்படி ஒவ்வொரு பிராணிக்கும், இவ்வாழ்விலுள்ள பிரியத்தையும் பார்த்து பெருமூச்சு விட்டு நான் பார்க்கும்படியாக வந்த சந்தோஷகரமான பூமி இதுதானு? வேலைக்காரனுடைய உணவானது வெயர்வையால் எவ்வளவு உப்பாயிருக்கிறது! காளைகளது வேலை என்ன கஷ்டம்! புதர்களில் பலவீன ஜெந்துக்களுக்கும், பலமுள்ளவைகளுக்கும் எவ்வளவு குரூரமான சண்டை நடக்கிறது! ஆகாயத்துப் பறவைகளுக்குள்ளும், அப்படியே ஜலத்திலும் தப்ப வழி இல்லை; பார்த்தது போதும் என்று எண்ணிக்கொண்டு அடுத்தாற்போலிருந்த ஒரு நாக மரத்தடியில் போய் உட்கார்ந்து இப்படிப்பட்ட உலகத்தின் துன்பங்களின் காரணத்தையும், அவைகள் நீங்கும் வழியையும் குறித்து ஆலோசிக்கத் தொடங்கினார். அவரது இருதயமானது மிகுந்த கருணையினாலும், உலகத்தில் ஜீவிக்கிற வஸ்துக்களெல்லாம் பரவிய அன்பினாலும், அவைகளின் துன்பத்தை நீக்க வேண்டுமென்கிற ஆசையினாலும் நிரம்பப்பட்டிருந்ததினாலே வேறு உலக விஷயங்களுக்கு இடங்கொடாமல் இந்த ஒரு பெரிய விஷயத்திலேயே தங்கித் தியானித்துக் கொண்டிருந்தது.

இப்படிப்பட்ட மகிமை பொருந்திய தியானத்தில் அவருக்கு நாழிகை போனது தெரியவில்லை. காலமே தியானத்திலிருந்தவர் மதியங்கழிந்து அஸ்தமிக்கும் சமயத்தில் அரசனாலனுப்பப்பட்ட சில சேவகர்கள் வந்து அவரை எழுப்பிக்கொண்டு போகும் வரையில் அதே தியானத்திலிருந்தார்.

# ஸத்திய தரிசனம்.

## மகாத்மா காந்தியின் ஜீவிய சரித்திரம்.

2-வது பாகம்.

அத்தியாயம் 11.

மகாத்மா காந்தி சென்ற வாரத்தில் "யெங் இந்தியா" பத்திரிகையில் தமது தென்னாப்பிரிக்கா அனுபவங்களைப் பற்றி மேலும் எழுதியிருப்பதாவது:—

மறுநாள் மத்தியானம் 1-மணிக்கு மிஸ்டர் பேகர் சொல்லியபடி தொழுகை நடக்குமிடத்திற்குப் போய்ச் சேர்ந்தேன். மிஸ் ஹாரிஸ், மிஸ் காப், மிஸ்டர் கோட்ஸ் முதலியவருக்கு மிஸ்டர் பேகர் என்னை அறிமுகம் செய்து வைத்தார். அங்கு வந்திருந்த அனைவரும் முழந்தாளிட்டுப் பிரார்த்தனை செய்ய ஆரம்பித்தனர். நானும் அவ்வாறே செய்தேன். அவர்களுடைய இஷ்டசித்திக்கு அவரவர் பிரார்த்தித்தனர். வழக்கமாகச் சொல்லும் வாக்கியங்களைத் தவிர, அன்றைய தினம் என்பொருட்டு இன்னொன்று சேர்க்கப்பட்டது. "கடவுளே, எங்கள் மத்தியில் வந்துள்ள புதிய சகோதரருக்கு வழி காட்டுங்கள். எங்களுக்குத் தாங்கள் அளித்துள்ள சாந்தியை அவருக்கும் அளியுங்கள். எங்களைக் காப்பாற்றிய யேசுநாதர் அவரையும் காப்பாற்றுவாராக" என்று தொழுதார்கள். பாடல்கள் அல்லது ஸங்கீதம் எதுவும் அக்கூட்டங்களில் கிடையாது. பிரார்த்தனைக்குப் பிறகு அவரவர்கள் மத்தியான போஜனத்துக்குப் போய் விடுவது வழக்கம். பிரார்த்தனை நேரம் 5 நிமிஷந்தான்.

மிஸ் ஹாரிஸும், மிஸ் காப்பும் வயதான கன்னியா ஸ்திரீகள். மிஸ்டர் கோட்ஸ் மத விஷயத்தில் பெரிதும் சிரத்தை கொண்டவர்; ஆடம்பரமற்றவர். ஞாயிற்றுக்கிழமை தோறும் மேற்சொன்ன இரண்டு ஸ்திரீகளும் என்னைத் தங்கள் இருப்பிடத்திற்கு வந்து தேயிலைப் பானம் செய்து விட்டுப் போகும்படி கூப்பிட்டார்கள். நானும் மிஸ்டர் கோட்ஸும் ஞாயிற்றுக்கிழமை கூடும் போதெல்லாம், அந்தந்த வாரத்தில் நான் வாசித்த புத்தகங்களைப் பற்றி அவருடன் விவாதிப்பேன். அந்த ஸ்திரீகள் இருவரும் தங்களுடைய அனுபவங்களைப் பற்றியும், தங்களுக்கேற்பட்ட சாந்தியைப் பற்றியும் சொல்லுவார்கள். மிஸ்டர் கோட்ஸ் வயதில் சிறியவர். மனம் விட்டுப் பேசுவார். நாங்கள் சேர்ந்தாற்போல் உலாவப் போவோம். சில கிறிஸ்தவ நண்பர்களிடம் என்னை அவர் அழைத்துச் செல்வார். அவர் கொடுத்த புத்தகங்களையெல்லாம் நான் வாசித்தேன். 1893-ல் நான் வாசித்த புத்தகங்கள் அனந்தம். வாசித்த புத்தகங்களில் சில புரிந்தன; சில ருசியாயிருந்தன. மற்றவை அப்படியல்ல. சில புத்தகங்களைப் படித்து நான் ஒரு பயனும் அடையவில்லை. நாஸ்திக வாதத்தைக் கண்டித்து ஒரு புத்தகம் எழுதப்பட்டிருந்தது. ஆனால் அப்புத்தகத்தில் கூறப்பட்டிருந்த வாதங்கள் எனக்கு அநாவசியமாகப்பட்டன. ஏனெனில் தெய்வ நம்பிக்கை எனக்குத் திடமாக அப்பொழுது ஏற்பட்டுவிட்டது. யேசுநாதர் தான் தெய்வத்தின் ஒரே அவதாரம் என்றும், மனிதனுக்கும் கடவுளுக்கும் மத்தியஸ்தர் அவர்தான் என்றும் ஒரு புத்தகத்தில் சொல்லப்பட்ட வாதங்களை [illegible] நம்பவில்லை. ஆனால் மிஸ்டர் [illegible] சுலபமாக விட்டுக்கொடுக்க மாட்டார். என்னிடத்தில் அவருக்கு [illegible] ப்ரீதியுண்டு. என்னுடைய கழுத்தில் துளஸிமாலை யணிந்திருந்ததை அவர் பார்த்தார். அதைக் கண்டு அவருக்கு வருத்தமாயிருந்தது. அது குருட்டு நம்பிக்கையென்றும், அந்த மாலையை அறுத்துவிட வேண்டுமென்றும் அவர் சொன்னார். அது என்னுடைய தாயார் கொடுத்த தானமாகையால் அதை அறுக்கக் கூடாதென்று சொன்னேன். அப்படியானால் அதில் உனக்கு நம்பிக்கையுண்டா என்று அவர் கேட்டார். "அதைத் தரிப்பதால் பலனுண்டா இல்லையா என்று எனக்குத் தெரியாது. அதைத் தரிக்காவிடில் கெடுதல் ஏற்படுமோவென்றும் எனக்குத் தெரியாது. எனது தாயார் அன்புடன் கொடுத்த மாலையை நான் ஏன் தரிக்காமல் இருக்க வேண்டும்? தானாக அந்த மாலை தேய்ந்து அறும்வரையில் அதைத் தரித்திருப்பேன். வேண்டுமானால் புதிதாக மற்றொன்று வாங்கவில்லை. இருப்பதை விட முடியாது" என்று சொன்னேன். ஆனால் மிஸ்டர் கோட்ஸுக்கு அது பிடிக்கவில்லை. என்னுடைய மதத்தில் அவருக்கு மதிப்பில்லை. நான் அறியாமை என்ற படுகுழியில் வீழ்ந்து கிடப்பதாக அவர் நினைத்தார். கிறிஸ்தவ மதந்தான் ஸத்திய மதமென்றும், யேசுநாதர் தான் எனது பாவங்களை மன்னிக்கக் கூடியவரென்றும் அவர் சொன்னார். பல [illegible] கிறிஸ்தவர்களுக்கு என்னை அறிமுகம் செய்து வைத்தார். அநேகமாக அவர்கள் நல்லவர்கள்; தெய்வ பக்தர்கள். ஒரு குடும்பத்தினர் மட்டும் யேசுநாதரிடத்தில் பூரண நம்பிக்கை வைக்கும்படி பலவிதமான காரணங்கள் சொல்லி என்னை வற்புறுத்தினார்கள். யேசுநாதரின் அளவுகடந்த அன்பையும், மனிதர்களின் பாவங்களுக்காக அவர் கஷ்டப்பட்டதையும் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். ஆனால் எனக்கு அது நம்பிக்கையுண்டு பண்ணவில்லை. பாவத்திலிருந்து விடுவிக்கப்படுவதைவிட பாவமே செய்யாமல் இருக்க நான் வழிதேடிக் கொண்டிருப்பதாக நான் தெரிவித்தேன். எல்லாப் பாவங்களையும் யேசுநாதர் மீது போட்டுவிட்டால் அவர் காருண்யத்துடன் பொறுத்துக் கொள்வார் என்று சொன்னதில் எனக்கு நம்பிக்கை யுண்டாகவில்லை.

# வெள்ளைக்காரர் நாகரீகம்.

## ஒரு விவாக ரத்து வழக்கு.

சேப்டவுன், ஜூலை 23—பிறர் மனைவியைத் திருடிக்கொண்டு போன ஒருவன் அம்மனைவியைப் பறிகொடுத்த புருஷனுக்கு எவ்வளவு நஷ்டஈடு கொடுப்பது என்ற விஷயம் விவாக ரத்து கோர்ட்டில் விவாதத்திற்கு வந்தது. விஷயம் என்னவென்றால், மிஸ்டர் ஹென்றி ஸ்டாவெல் என்ற ஸங்கீத வித்வான் தன்னுடைய மனைவியுடன் விவாக ரத்து செய்து வைக்க வேண்டுமென்றும், கள்ளப் புருஷனுகிய டேனியல் என்பவரிடமிருந்து 1000 பவுன் நஷ்டஈடு வேண்டுமென்றும் வியாஜ்ஜியம் கொண்டுவந்தார்.

வாதியின் மனைவி நடந்த விஷயத்தை ஒப்புக்கொண்டாளாயினும், வாதிக்கு நஷ்டஈடு கொடுக்க வேண்டியது அனாவசியமென்றும், அநேக வருஷங்களுக்கு முந்தியே வாதியினிடத்தில் எனக்கு விசுவாசம் போய்விட்டதென்றும், 1916-க்குப் பிறகு வாதி தன்னை ரக்ஷிக்கவில்லையென்றும் சொன்னாள். கடைசியாக ஜட்ஜி விவாகத்தை ரத்து செய்துவைத்து 76 பவுன் வாதிக்கு நஷ்டஈடும் அனுமதித்தார். வாதிக்கு ஏற்பட்ட செலவுகளை டேனியல் கொடுக்க வேண்டுமென்றும் ஆக்ஞாபிக்கப்பட்டது.

மனைவி தனது வாக்குமூலத்தில், விவாகமான போது தனக்கு 17-வயதுதான் என்றும், புருஷனிடத்தில் தனக்குக் கொஞ்சங்கூட பிரியமில்லையென்றும், புருஷனுக்கு வேலையில்லாத சமயத்தில் குடும்பத்தை நடத்த வேண்டிய பொறுப்பு தன் மீது விழுந்ததென்றும், தனது துணியைக் கூட விற்று குடும்பத்தை நடத்தியதாகவும், 22 வருஷகாலம் தனக்கு ஒரு சுகமும் கிடையாதென்றும், இருந்த போதிலும் சந்தோஷமாக குடும்பம் நடத்தி வந்ததாகவும், புருஷன் வேலையே செய்வதில்லையென்றும், தன்னை வெளியே அனுப்பிவிட்டுச் சுகமாயிருந்தார் என்றும் சொன்னாள்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



## தேசாபிமானத் திரட்டு.

(நமது ராஜ்ய நிருபர் எழுதுகிறார்.)

### சீமைப் பத்திரிகைகளின் சிறப்பு.

ஒரு தேசத்தின் முற்போக்கை "கல்வி" கொண்டு அளவிட வேண்டியதிருக்கிறது. அக்கல்வியின் அபிவிருத்தியை பத்திரிகைகளால் மதித்துவிடலாம். தற்சமயம் உலகத்தில் தலை சிறந்து நிற்கும் தேசங்களிலெல்லாம், லக்ஷக்கணக்கான சந்தாதாரர்களுடைய கணக்கற்ற பத்திரிகைகள் உலாவுகின்றன. தேசாபிவிருத்திக்கான ஒவ்வொரு துறையிலும் பத்திரிகைகளின் கோஷ்டமே பலமாயிருக்கிறது. ஆகவே இக்காலத்தில் மேனாடுகளில் புதிதாக ஒரு பழமொழியும் பரவுகிறது. அதாவது, "ஆடையில்லா மனிதன் அரை மனிதன், பத்திரிகை படியாத மனிதன் பாதி மனிதன்" இதிலிருந்து மேனாட்டார்களுக்கு பத்திரிகை வாசிக்க வேண்டுமென்ற உணர்ச்சி எவ்வளவிருக்கிறதென்று அறிந்து கொள்ளலாம். ஆனால் இந்தியாவிலுள்ள பத்திரிகை பெரும்பாலும் பத்தாயிரம் சந்தாதாரர்களையுடையனவாயிருக்கின்றன. அதற்கு மேலுள்ள பத்திரிகைகள் அபூர்வமாகத் தானிருக்கும். சமீபத்தில் லண்டனிலுள்ள "டேயிலி ஹெரால்டு" என்னும் பத்திரிகையின் ஆசிரியர் தனது பதவியை ராஜீநாமாச் செய்யும்போது பின்வருமாறு கூறுகிறார்; —"நான் இப்பத்திரிகையின் அபிவிருத்தியை கருதி கஷ்டமில்லாமல் நடக்கும்படி செய்வதற்கு 1922 ஆசிரியர் பதவியை ஏற்றுக் கொண்டேன். இப்போது என்து கோரிக்கை பூர்த்தியாகி விட்டது. சந்தாதாரர்கள் தொகை 130000-லிருந்து 450000-மாக உயர்ந்து விட்டது."

### எப்போதுண்டாகும்?

இத்தாலி தேசத்தில் ஒரு புதிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இவ்வுத்தரவை அலக்ஷியமாக நினைக்கிறவர்களுக்கு அலக்ஷியமாகவும், அற்பமாய் நினைக்கிறவர்களுக்கு அற்பமாயும், ஆச்சரியமாய் நினைக்கிறவர்களுக்கு ஆச்சரியமாயும் தோன்றலாம். அதாவது:—இத்தாலியதேசம் விட்டு சுவிட்ஸர்லாண்டு முதலிய பக்கத்து பிரதேசங்களுக்குப் போய் பொழுது போக்குவதிலும், தமாஷிலும் ஏராளமான பொருள் செலவிடப் படுகிறதாம். இத்தாலியர் பணம் அந்நியநாடுகளில் செலவு செய்யப் படுவதினால் தங்கள் நாட்டுச் செல்வநிலைமை கெட்டு பொருளாதார நிலைமையும் பாதிக்கப் படுமென்று இத்தாலியர் பிறநாடுகளில தமாஷாகக் காலங்கழிப்பது கூடாதென்று உத்தரவிடப் பட்டிருக்கிறதாம்.

இவ்வுத்தரவை யார் யார் எவ்விதம் நினைத்தாலும், தேசம்பெரியது என்று எண்ணும் தேசாபிமானிகளுக்கு இத்தாலியக்கவர்ன்மெண்டாரின் உத்தரவு நியாயமானதென்று தோன்றாமல் போகாது. இவ்வுத்தரவில் பிறநாட்டாருக்கு வெறுப்புண்டாகுமாவென்பதை இத்தாலியர் கவனிக்க வேண்டிய அவசியமில்லை. அவரவர் தேசமுன்னேற்றத்திற்கு அவரவர் கவனித்துக் கொள்ள வேண்டியதுதான். இதுபோல்இந்தியர்களுக்கும பலதுறைகளிலும் இத்தகைய தேசாபிமான உணர்ச்சி என்று தான் ஏற்படுமோ அன்று தான் நம்நாடு கதி மோக்ஷம் அடையும்.

### ராஜதந்திரமாயிருக்கலாம்!

பண்டிட் மதன்மோஹன் மாளவியா அவர்கள் ஒரு ஹிந்து மதாபிமானியாயினும் தேசியவாதியுமாவார். சுமார் 40 வருஷங்களாக ராஜீய வானத்தில் சஞ்சரித்துக் கொண்டிருக்கிறார். இவர் ஆதியில் மிதவாதக் கட்சியைச் சேர்ந்தவர். மகாத்மாகாந்தியடிகள் இயக்கம் தோன்றிய காலத்தில் மிதவாதக்கட்சியின் போக்கை கொஞ்சம் மாற்றிக்கொண்டு ஒத்துழையாமையிலும் பூரணமாகச் சேராமலும், மகாத்மாவின் சிற்சில திட்டங்களுக்கு அநுதாபம் காட்டிக் கொண்டிருந்தார். அதன்பின் சுயராஜ்யக் கட்சி தோன்றி சட்ட சபைகளில் நுழைந்த வுடன், இவரும் சட்டசபைக்குச் சென்றார். ஆனால் சுயராஜ்யக் கட்சியில் சேரவில்லை. இவரும் இவரைப்போன்ற சிலரும் தனிக்கக்ஷியாக நின்று அதற்கு சுயேச்சைக் கட்சி என்று பெயர் கொடுத்தார்கள். சட்ட சபையில் சமயம் வாய்த்த போதெல்லாம் பெரும்பாலும் சுயராஜ்யக் கட்சிக்குப் பக்கபலமாக நின்று ஒத்துழைத்தார்கள். இப்போது பரஸ்பர ஒத்துழைப்புக் கட்சி தோன்றியதும், ஜெயகர், கேல்க்கார் போன்ற தலைவர்களைப்போல் இவரும் அக்கக்ஷித்தலைவர்களுள் ஒருவரானார். பரஸ்பர ஒத்துழைப்புக் கட்சி தோன்றியதிலிருந்து கவர்ன்மெண்டிற்கு சிறிது ஆறுதல் ஏற்பட்டிருக்கிறது.

இக்கக்ஷியை கவர்ன்மெண்டார் அந்தரங்கத்தில் விசுவாசிக்கலாம். காரணம் இக்கட்சியின் நோக்கத்தினால் கவர்ன்மெண்டு நிர்வாகப் போக்குக்கு சிறிதும் இடைஞ்சலில்லை. ஆகவே இக்கட்சியின் தலைவரான பண்டிட் மாளவியா பொது ஜனங்கள் மத்தியில் செல்வாக்குப் பெறுவதற்கேதுவாக அவர் கல்கத்தாவிற்கு வரக்கூடாதென் 144-வது தடையுத்தரவைப் போட்டு அவர் அதை மீறியதையும் ஒரு பொருட்டாய் கவனிப்பதுபோல் பாவனைகாட்டி கைதுசெய்யாமல் விட்டிருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. இதுவும் ஆங்கில அதிகாரவர்க்கத்தினரின் இராஜதந்திரமாயிருக்கலாம். இவர் இப்படி கைது செய்யாமல் விடப் படுவதினால் பொது ஜனங்கள் மத்தியில் நல்ல செல்வாக்குடனிருக்க ஏது வாகிறது. இதனால், இவர் தன் கட்சியின் நோக்கமாகிய பரஸ்பர ஒத்துழைப்பை பிரஸ்தாபப்படுத்த இடம் ஏற்படுகிறது. இதனால் கவர்ன்மெண்டு நிர்வாகப் போக்கிற்கு லாபமுமிருக்கிறது. இப்போது இவர் பொதுஜனநல்லபிப்பிராயத்திற்கு பாத்திரப் பட்டிருக்கிறார். இக்கிளையிலிருந்து அவருடைய கட்சிப் போக்கை இனி கண்டறிந்து நமது சந்தேகத்தை உறுதிப் படுத்தலாம்; அல்லது உதறித்தள்ளலாம்.

## ஏரால் மகாநாடு.

### தேர்தல் பிரசாரம்.

(ஸ்ரீமான் எஸ். ஏசுதாஸ்நாடார் எழுதுகிறார்)

சென்ற 8—8—1926-ல் அமாவாசையன்று வழக்கம்போல் நடைபெற்றது. தாம்பிரவர்ணிநதியில் வெள்ளம் அதிகமாயிருந்தது. ஆற்றிற்கு தெற்கேயுள்ள பக்தகோடிகள் பலரும விஜயம் செய்யத்தடையேற்பட்டபோதிலும், அநேகர் விஜயம் செய்து தோணியின் உதவியைக்கொண்டு ஆத்தூர், ஏரல், குரங்கணி இம்மூன்று பாகங்களின் வழியாய் வந்தது குறிப்பிடத்தக்கது. இதுபோக சுமார் 1000 ஜனங்களுக்கு மேலாக ஆற்றின் தென்பக்கம் தங்க நேரிட்டுவிட்டது. அன்னவர்கள் ஸ்ரீசுவாமியின் திக்கு நோக்கி தரிசனம் செய்து திரும்பலாயினர். மகாநாடு ஸ்ரீசுவாமிகளின் சன்னதிக்கு நேர்கிழக்கே ஆற்றின் கரையின் உப்பக்கம் ஓரமாய் நடைபெற்றது. சுமார் 1000 பேர் குழுமியிருந்தனர். தலைமைஸ்தானம் விருதுநகர் ஸ்ரீமான் ஞானசம்மந்தநாடாரவர்கள் வகித்தார்கள். கடவுள் வணக்கமானபின் ஸ்ரீமான்கள் பி. எஸ். கனியப்பநாடார், அரி. அ. செ. கந்தசுவாமிநாடார், கே. எஸ். அருணகிரிநாடார், எஸ். ஆர். மூக்கநாடார், வ. எஸ். துரைச்சாமிநாடார் முதலிய கனவான்கள், வரப்போகும்சட்டசபைத் தேர்தலைப்பற்றியும், நாடார்மகாஜன சங்கம் ஏழைமாணவர்கள் ஸ்காலர்ஷிப் லாட்டரிச்சிட்டைப் பற்றியும் விரிவாகப் பேசினார்கள். நம்தஜன சமூகப்பிரதிநிதிகளுக்கே சென்னை சட்டசபை எலக்ஷனில் ஓட்செய்ய வேண்டுமென்பதற்கு தக்க ஆதாரங்களுடன் பேசப்பட்டது.

நம்மவர்கள் அனைவரும் இவ்வாண்டில் தேர்தல் சம்மந்தமாய் மிக்க விழிப்புடனிருக்கிறார்கள் என்பதன் அறிகுறி அங்கு விளங்கிக்கொண்டிருந்தது என்பதிலும் ஐயமில்லை. இரவு சுமார் 11 மணிக்கு மகாநாடு முடிவுபெற்றது.

## விளக்கவுரைகள்.

மனோதைரியமுள்ளவர்களைக் காட்டிலும், பயந்தவர்களே தங்கள் விஷயத்தில் மிக ஜாக்கிரதையுள்ளவர்களாயிருக்கிறார்கள்.

* *

உபவாசமென்பது குடல் சம்பந்தமான அதிகப் பிணிகளுக்கு வைத்தியனும் சஞ்சீவியுமென்பது உண்மை.

* *

நல்லகருமம், நட்பு, கற்பு, அன்பு, சுத்தம் நற்குணச்செய்கை முதலியவைகளை பாலாக நமது வாழ்நாளென்னும் பானையில் ஊற்றி அனுபவமென்னும் மத்தால் அனுபவிக்கிறதாகிய கடைதல் செய்தால் தெய்வீகமென்னும் வெண்ணெய் பரிசுகிடைக்கும்.

* *

சொல்லிப்பின் செய்வதைக் காட்டிலும் செய்தபின் சொல்வது சந்தர்ப்பத்தைப் பொறுத்து மேலானதே.

* *

தன்னைப்போல் பிறரிருப்பது பிடிக்காததும், பிறர் நல்லாயிருப்பது பிடிக்காததுமான இரண்டு பேய்கள் எவர்களைப் பிடித்திருக்கிறதோ, அவர்கள் பாக்கியவான்களாவது முடியாது.

* *

பத்திரப்படுத்தி வைப்பவர்கள், பத்திரப்படுத்திவைக்கும் பொருளினால் பின்னொரு சமயம் பெரும் பயனடைவார்கள்.

* *

குறைவற்றவர் அற்றது குவலயம் எப்படிப்பட்டவர்களுக்கு மொரு சிறு குறைவு இருந்து கொண்டிருக்கிறது. பகவானொருவரே பரிபூரணமுடையவர்.

* *

ஒரேமந்திரமொன்றை எண்ணுவதாலதற்கும் எண்ணுவோர்க்குமோர் விதநவீன சக்தி பிறக்கிறது.

* *

ஒவ்வொருவருடைய பிற்கால சுகதுக்க ஜீவியமெல்லாம் அவரவருடைய சேர்க்கை வாயனையில் மறைந்து குவிந்து கிடக்கிறது.

* *

இனிமை வார்த்தைகளில் மயங்குவோரும் இனிமை வார்த்தைகளால் மயக்குவோருமுண்டு. ஆனால் தீய விஷயத்தில் தித்திப்பு வசனங்களை வீசி மயக்குவோரை வினை தண்டிக்க ஏற்ற தருணத்தை கூவி யழைக்கிறது.

* *

ஒன்றிருக்கும் இடத்திலின்னொன்றிருப்பது வெகு சொல்பம். இரண்டுமோரிடத்திலமைவதருமை. எள் செடி எண்ணெயையே கொடுத்து விட்டால் எவ்வளவு சுலபமும் சிறப்புமோ, அதுபோலவே இரண்டும் சேர்ந்து ஒற்றுமையா யோரிடத்தில் வாழ்வதும்மேலானது. இரண்டும் நெருங்கிய பந்துக்களானாலும், தனியே அநேகமாய் விலகி இருக்கும். ஒன்று அழியாதது; மற்றொன்று அழிவது. அவை கல்வியும் செல்வமுமே.

* *

ஒரேவிதமான வியாபாரத்தில் விவேகமுள்ள சமர்த்தன் பத்து ரூபாயும், அது அற்றோன் சொற்பபணமும் லாபமடைகிறான். அது வினைகுறித்து.

* *

விவேகமும் சாமர்த்தியமும் அனுபவத்தின் பயனேயாயினும் பூர்வவினைப்பலனே சகலத்திற்கும் முதற்காரணமாகுமென்பது தெளிவுரை.

* *

நமது வாயிலிருந்துவரும் வார்த்தைகளே நமது ஜென்ம சத்துருக்களாயும், சில சமயங்களில் பயங்கரமான கொலைகளுக்கு காரணமாயும், உடுக்கை யிழந்தவன்கைபோன்றஉத்தமநேயனாயுமிருக்கிறது.

* *

ஒரு மனிதன் சாந்தத்தோடு சிந்திக்கும் போது ஜனிக்கும் நல்யோசனை சனே முனியோடு யோசிக்கும் போது உதிக்காதென்பது ஸ்பஷ்டம். உணவு உண்பவைத அநுசரித்து யோசனையும் தோன்றும்.

* *

அருமையான சம்பா அரிசியில் கூட கல் கிடக்கிறது. திங்களில் கூட களங்கம் உட்கார்ந்திருக்கிறது. அநேகமாய் சகலரிடத்திலும் ஏதாவதொரு குற்றமில்லாமலிருப்பதரிது.

* *

வழக்கம் வழக்கமென்று அநேக நியாயங்கள் கொலை செய்யப்படுகின்றன. ஆனால் பழக்கம் அநேக சன்மார்க்கத்திற்கு அனுகூலமான வழி காட்டியாயிருக்கிறது.

* *

பெரியோர்கள் வாக்கில் ஆழ்ந்த கருத்துக்கள் பதுங்கி யிருக்கின்றன. மேல்புல் மேய்வோர்க்கும் அவ்வாக்குகளின் தெய்வ சுவைக்கும வெகுதூரம்.

* *

கடமையிலிருந்து தவறிவிடாதோர்களுக்கு முதலாளிகளிடத்தில் பயமும் மனச்சஞ்சலமுமில்லை.

அ. கு. அண்ணாமலைநாடார்.

## திருடர்களின் நாகரீகம்.

(நாடோடி எழுதுகிறார்.)

நம்நாட்டில் சாதாரணமாக திருடர்கள் திருட்டுக்கு வருவது இரவில்தான். அதுவும் கள்ளிருள் காலங்களில் அர்த்த இராத்திரி கொறட்டை யிருக்கும் சமயத்தில், கன்னக்கோலிட்டோ, கதவுகளைத் திறந்தோ களவு செய்வது வழக்கம். நாகரீகப் போக்கிற்கு ஏற்றவாறு திருடர்களும் சற்று கிரமத்தில் வழக்கத்தை மாற்றிக் கொண்டு வந்து விட்டார்கள். எப்படியெனில், நம்நாட்டின் வழக்கம், நடைஉடை பாவனை ஆகியவைகளை அநேகமாய் நம்மவர்கள் மாற்றிக்கொண்டு நாகரீகமென்று மதிமயங்கி நம் நாட்டிற்கு சிறிதும் ஒவ்வாத அந்நிய நாட்டாருடைய ஆபாசமான ஆசார ஒழுக்கத்திலிறங்கி யிருப்பதுபோல், திருடர்களும களவு செய்யும் வழிகளையும், நேரத்தையும், மேனாட்டுத் திருடர் நாகரீகத்தை அனுசரித்து வருகின்றனர். ஓடிக்கொண்டிருக்கும் ரயில்வண்டியில், முதல் வகுப்பு, இரண்டாவது அறைகளில் துப்பாக்கி சகிதம் புகுந்து, கதவை தாழிட்டுக்கொண்டு பிரயாணிகளை பயமுறுத்தி உள்ளது உரியதெல்லாம் சுருட்டி புரட்டி எடுத்துக்கொண்டு, வண்டி நிற்கு மிடங்களில் அவர்கள் கூச்சல்போடாதபடி அரட்டிக்கொண்டே மெதுவாக இறங்கி தப்பி ஓடி விடுகிறார்கள். விலையுயர்ந்த ஆடையாபரணங்களால் நன்றாய் அலங்கரித்துக் கொண்டு பெரிய தனவந்தர்கள் மாதிரி, தற்காலத்திருடர்கள்ஏராளமான பிரயாணச் சாமான்களுடன் ரயில் வண்டியில் ஏறி தப்புமூலம் அறிந்து களவுக்குக் குறிப்பிட்டு வைத்திருக்கும் தனவான் பக்கத்தில் போய் வெகு உல்லாசமாய் உட்கார்ந்துகொண்டு அதிக ஆடம்பரத்துடன் உறவாடி, அத் தனவான் இறங்கும் ஸ்டேஷனுக்கு முந்தியதில், தன்னுடைய மூட்டை முடிச்சுகளை எடுத்துக்கொண்டிறங்குவது போல், உளவு மூலம் அறிந்த அத் தனவானுடைய குறிப்பிட்ட கைப்பெட்டியையும் தோன்றாமல் எடுத்துக் கொண்டும், "போய் வருவதாக"வும் சந்தோஷத்துடன் சொல்லிக் கொண்டிறங்கித் தப்பிவிடுகிறார்கள்.

பட்டப்பகலில் வெட்ட வெளிச்சமாயிருக்கும்போது, ஜன நெருக்கடியான போக்கு வரத்துள்ள பஜாரில் பிரபல வியாபாரி கடை முன் தற்கால திருடர்கள் தங்கள் மோட்டாரை நிறுத்திக் கொண்டு, துப்பாக்கிகள் சகிதம் கடையில் புகுந்து ஒரு கால் மணி நேரத்திற்குள் வெகு ஆச்சரியமாய் களவு செய்கிறார்கள். உள்ளே புகுந்த வுடன், கடையின் சொந்தக்காரன் முன் துப்பாக்கியை நீட்டிக் கொண்டு இரும்புப்பெட்டித் திறவுகோல் மற்றும் விஷயங்களையும் அவனிடத்திலேயே கேட்டுக்கொண்டு அவன் பார்த்திருக்கவே, நகை நட்டு ரொக்கம் முதலியவைகளை எடுத்துக்கொண்டு தயாராகக் காத்துக்கொண்டிருக்கும் மோட்டாரில் ஏறி ஓடிவிடுகிறார்கள். உயிர்பயத்திலிருந்து நீங்கிய சொந்தக்காரன், திகைப்புடன் மயங்கிப் பின் தேறி அலறுவதற்குள் மோட்டார் பறந்தோடிவிடுகிறது. பெரியநகர்பகுதிகளில்இத்தகைய திருட்டு அடிக்கடி வெகு துணிகரமாய் நடந்து கொண்டுவருகிறது. நம் மேனாட்டாரின் நாகரீகத்தில் அடையும் பலன்களில் இதுவும் ஒன்று போலும்!

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



நாடார்குலமித்திரன்

அக்ஷய ௵ ஆவணி ௴ ௭ உ

## நமது மித்திரன்.

நமது நாடார் மகாஜன சங்கம் இதயில்பொறையாற்றிற்கு ருட்கி, விருதுநகரில்நடந்தஐந்தாவது மகாநாடு வரையும் ஓயாது வற்புறுத்தி வந்ததற்கேற்பவும், பத்திரிகையினாலே ஒரு ஜன சமூகமோ, தேசமோ முன்னேற்ற மடைய மிக அனுகூலமாயிருக்குமென்பதை உத்தேசித்தும் 1919 ௵ ஜன சமூகத்தின் (நாடார்குலமித்திரன்) மேகாலத்துள் பத்திரிகையை எழுப்பி மாதம் ஒரு முறை, இரு முறை, மும்முறையென சந்தாதார்களுடைய ஆதரவினாலே இடம், பொருள், ஏவல் யாவையும் பெற்று வளர்பிறை போல் மென் மேலும் அபிவிருத்தி யடைந்து வந்தது. பூரணசக்தி கொண்டு பிரகாசித்தது. அக்காலம் சங்கம் ஜ்வலித்தது. ஜன சமூகம் பிரகாசித்தது. சங்கஸ்தாபனங்களும் கல்வி நிலையங்களும் எண்ணிலாவுதித்தன. காண்பனவெல்லாம் ஏகமாய்த் தோன்றின. மற்றும் எத்தனையோ பொது ஸ்தாபனங்கள் விருத்தி முகங் காட்டின. நாடார்கள் ஒவ்வொருவருடைய அகமும், முகமும் ஒன்றுபட்டு அபிவிருத்தி என்ற அழகால் அலங்கரிக்கப் பெற்றிருந்தன. ஆசிரியர் பிரசாரமும் அளவுகடந்திருந்தது.

அது சமயம் சிலோன், பர்மா முதலிய இடங்களுக்கு அவ்விடத்திய பற்பல நண்பர்களின் விருப்பத்திற்கிணங்கியும், மித்திரன் அபிவிருத்தியைக் கருதியும் விஜயஞ் செய்தோம். மித்திரன் உதயத்திற்கே காரணபூதர்களாயிருந்த சிலோன் நண்பர்களும், பர்மா நேயர்களும் செய்த பேருதவியினாலே மித்திரன் ஐந்தாவதாண்டில் வாரமொரு முறை பிரசுரமாகி நமது சமூகத்துக்கும், நாட்டுக்கும் அத்தியாவசியமான காரியங்களையும், அவசரமான விஷயங்களையும் அன்போடுரைத்து வந்தது. மென்மேலும் பக்கங்களை அதிகரித்து விஷயங்களை விரித்துச் செல்லமுடியாமல், ஏழாவதாண்டில் எதிர்பாராத வண்ணம் பல கஷ்டங்கள் வந்தாற்றாலும், ஆண்டவனுடைய அனுக்கிரகத்தினாலும், பெரியோர்களுடைய ஆசீர்வாதத்தினாலும், சந்தா நண்பர்கள், போஷகப் பிரபுக்கள், நன்கொடையாளர்கள் முதலிய உத்தம குலாபிமானிகளின் ஒத்தாசையினாலும், சர்வ விக்கினங்களும் விலகி நாளது மங்களகரமான ஆவணி மாதம் சங்க வாரக் கொண்டாட்டம் முதல் வாரத்தில் மித்திரன் எட்டாவது ஆண்டு ஆரம்பித்திருக்கிறது. இவ்வாண்டு முடியுமுன் மித்திரனை இன்னும் மேலான நிலைமையில் சமூக ஊழியத்திற்குத் தயார் செய்யப் பல பிரயத்தனங்களும் முயற்சிகளும் கூடிச் சித்தி பெற அனைவோருடைய ஒத்தாசையும் வேண்டிக் கொள்ளுகிறோம். மேலும் ஒவ்வொரு சந்தாதாரும், புதுச் சந்தாதார்களையும், புதுப் போஷகப் பிரபுக்களையும் சேர்த்துக் கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம். புது வருட நன்கொடைப் பெட்டியும் திறந்து வைத்திருக்கிறோம். அன்பர்கள் யாவரும் அதை நிரப்புவார்களாக.

நாடார் மகாஜன சங்கம் லாட்டரிப் பிரைஸ் எடுக்கப்பட்டவுடன் நமது "நாடார்குல மித்திரன்" க்ஷேம நிதி லாட்டரிப்புஸ்தகங்கள் நமது சந்தா நேயர்களுக்கெல்லாம் அனுப்பிவைப்போம். எல்லாவற்றையும் ஒப்புக்கொண்டு மித்திரனை விருத்தி செய்ய ஒத்தாசை செய்யும் வண்ணம் மறுமுறையும் கேட்டுக் கொள்ளுகிறோம்.

## தேவாலய

## சீர் திருத்தச் சட்டம்.

மனிதவாழ்க்கையைக் கடவுள் தம் திருக்கருணையினாலே சதா சீர்திருத்தம் செய்து கொண்டிருக்கிறார். அவருடைய திருக்கருணையினாலே புதுப்புது மகாத்மாக்களை மனிதர்கள் மத்தியில் அனுப்பிக் கொண்டிருக்கிறார். அவருடைய திருத்தத்திற்குப் பொருத்தமில்லா வழிகளிலேயே மனிதர்கள் போய்க் கொண்டிருக்கிறார்கள். தெய்வ சீர்திருத்தத்திற்குப் பக்குவமான வழிக்கு மனிதர்களைக் கொண்டுவர தெய்வ நிலையங்களைச் சீர்திருத்தம் செய்வது அறிவாளிகளுடைய கடமையாயிருக்கிறது. குழந்தையும் தெய்வமும் கொண்டாடுமிடத்தில் குடிகொண்டிருக்குமென்று கூறுதற்கேற்ப நமது நாடு எக்காலமும் கடவுளை முன்னிட்டே சகல வாழ்க்கையும் நடாத்திவந்திருக்கிறது. அத்தகைய சாதனங்களுக்கு ஏதுகரமாகிய அநேக ஆலயங்களும், மடங்களும் கொலைக்களங்களாகவும், திருடர்கள் குகைகளாகவும், தாசிகள் இல்லங்களாகவும் போய்விட்டன. இதனால் தேவ ஒளி ஓடி ஒழிந்துவிட்டது பருவகாலம் மாறி பஞ்ச நாடாகவும் போய்விட்டது. அரும்பாடுபட்டுக் கட்டி முடித்த கரையான் புற்றுள் பொல்லா விஷப் பாம்புகள் புகுந்து கரையானைத் துரத்திவிட்டுச் சுயேச்சையுடன் வசிப்பது போல் நமது கோயில்களைக் கட்டிய குபேரகுலோத்துங்கர்களையெல்லாம் கோயில்களை விட்டுத் துரத்திவிட்டு கோயில்களுக்குத் தாங்களேபிறந்தமக்களென்று ஒரு ஜாதியார் கொண்டாட்டமாடுவதுடன் பல கொடுமைகளும் செய்து வருகிறார்கள். கட்டிவைத்த கனவான்களோ அவர்களைக்கண்டு பொல்லாத பாம்பைக் கண்டவர்களைப்போல் பயந்தொதுங்கி நிற்கிறார்கள்.

இவ்வனியாயங்களையும் அக்கிரமங்களையும் தவிர்ப்பதற்கு அரசாங்கத்தார் சட்டம் செய்ய வேண்டிய தவசியமெனக்கண்டு கனம் பனகால் ராஜா சென்னை சட்டசபையில் தேவாலய சீர்திருத்தச் சட்டத்தைக்கொண்டு வந்தார். அதுவும் நிறைவேறியிருக்கிறதென்பதும், அதை சகலவகுப்பினர்களும் ஆதரித்து வருகிறார்களென்பதும் யாவரும் அறிந்த விஷயம். கோயில்ப்

## பலதுறைக்காரிகை.

### நல்லவேளை.

நல்லவேளையாகத் தஞ்சை திருச்சி ஜில்லாவாசிகள் காவிரிவெள்ளக் கொடுமையிலிருந்து தப்பிக்கொண்டார்கள். சென்ற 1924-௵ வந்த வெள்ளத்தினால் இஜ்ஜில்லாவாசிகள் அடைந்த கஷ்ட நஷ்டங்களிலிருந்து தேறுமுன் மற்றொருவெள்ளம்வந்து பீடிப்பதென்றால் அது தாங்கக்கூடியதா? தலைக்குவந்தது தலைப்பாகையோடு போனதுபோல் சிற்சில நஷ்டத்தை உண்டாக்கிவிட்டு வெள்ளம் ஒதுங்கி விட்டது.

திருச்சினாப்பள்ளியில் ஒரு பகுதியில் வெள்ளம்புகுந்து விட்டது. ஈரோடில் 22 அடிவரை வெள்ளப்பிரவாகம் உயர்ந்திருந்தது. தஞ்சைஜில்லா கும்பகோணத்திற்கு அருகில் ஒரு உடைப்பு ஏற்பட்டிருக்கிறது. காவிரிஉற்பத்திஸ்தானத்தில் 8½ அங்குலம் மழை பெய்திருக்கிறது. தமிழ் நாட்டிற்கு இவ்விருஜில்லாக்களும் நெல்களஞ்சியம் போன்றவைகள். இறுதியில் ஈசன் இவ்வாறாயினும் கிருபை கூர்ந்ததற்கு நாம் அன்புடன் இறைஞ்சுவோமாக.

### மனிதனுக்கும் வெறியா?

நாய்க்குத்தான் வெறிபிடித்து ஆட்களை கடிக்குமென்று நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் இப்போது மனிதர்களுக்கும் வெறிபிடித்திருக்கிறதாக விசித்திர செய்தி ஒன்று கூறுகிறது. புனேயிலுள்ள ஒரு சிப்பாய் வெறிபிடித்து இரண்டு இந்திய ஆசிரியர்களைக் கொன்றுவிட்டானாம். ராஜீயக் காரியஸ்தர் மேஜர் பிலிப்பையும் காயப்படுத்திவிட்டானாம்.

### சந்தர்ப்பத்தைநழுவவிடுவாரா?

நமது ராஜப்பிரதிநிதி லார்டு இர்வின் தான் வந்த சொற்பகாலத்திற்குள் ஜனங்களுடைய பாராட்டுதலுக்குப் பாராட்டிக்கொண்டே வருகிறார். சாதாரணமாக எளிய ஜனங்களிடத்தில் நெருங்கி குறைகளைக் கவனிக்கிறார் விவசாயத்தை நன்றாய் கவனித்து விருத்திசெய்ய அமைக்கிறார் என்று நல்லபெயருடனிருந்து கொண்டிருக்கிறார். இச்சப் பெயரும் புகழும் நீடிக்க வேண்டுமானால் அவர் தனது செய்கை கொண்டு தானிருக்கிறது. அது சமயம் நாணயச் செலவாணிக் கமிஷன் யாதஸ்தில் ஜனங்கள் ஏகோபித்து எதிர்அபிப்பிராய முள்ளவர்களாயிருக்கிறார்கள். இந்த சந்தர்ப்பத்தைநமது புதிய ராஜப்பிரதிநிதி கவனித்து இந்தியர்களுடைய விருப்பத்திற்கு ஆனாவது நலம். ஒரு ரூபாய்க்கு 16 பென்ஸாகவே, பவுன், நோட்டுக்குதப்பில்லாத நாணயமே போடவேண்டுமென்று அபிப்பிராயப் படுகிறார்கள்.

### ஒடுங்கி விடவில்லை.

நல்ல பால் சத்துள்ள மரத்தை வெட்டி விட்டாலும் அது பூமிக்குள் சதைப்பற்றுடன் வேரூன்றியிருக்குமானால் மாறி மாறி, முளைத்துக் கொண்டே இருக்குமென்பது இயற்கை பிரமாணம். இது போல் காந்தி ஒத்துழையாமை இயக்கம் மிகவும் புனிதமான முறையில் ஹிருதயசுத்தியுடன் ஆரம்பிக்கப்பட்டதாகையால் இவ்வியக்கம் சென்ற இரண்டு ஆண்டுக்கு முன்னர் தலைசிறந்து உலகத்

---

தோரெல்லாம் இந்தியாவை உற்று நோக்கிக் கொண்டிருக்கும் பான்மையிலிருந்தது. ஆனால் அதிகாரவர்க்கத்தினரின் எதேச்சாதிகாரத்தினாலும், இந்தியர்களிடத்திலுள்ள விழிப்பின்மையாலும் இவ்வியக்கம் தாழ்த்தப்பட்டது. ஆனாலும் அதன் தத்துவங்களும், நோக்கங்களும் அடிக்கடி சிலிர்த்துக்கொண்டிருக்கின்றன. சமீபத்தில் கல்கத்தாவிற்கு வரக்கூடாதென்று பண்டிட்மாளவியாவிற்கும் டாக்டர் மூஞ்சேவிற்கும் 144-வது தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதை அவர்கள் மீறி கல்கத்தாவிற்கு வந்துபொதுஜனங்களின்நன்மதிப்பிற்கு பாத்திரமானார்கள். ஆகவே கவர்ன்மெண்டோடு ஒத்துழைத்து கிழ்படியவில்லை. இதிலிருந்து ஒத்துழையாமை ஒடுங்கிவிடவில்லை என்று நினைக்க வேண்டியதிருக்கிறது.

### ஸ்திரீகளும் நிற்கலாம்.

ஸ்திரீகளும் சட்டசபைக்கு அபேக்ஷகர்களாய் நின்று தேர்ந்தெடுக்கப்படுவதிலுள்ள தடையை பம்பாய் சட்டசபை நீக்கிவிட்டது. புருஷர்களைப்போல் ஸ்திரீகளும் தேர்தல்களில் அபேக்ஷகர்களாய் நின்று கொள்ளுமாறு விதியைத் திருத்தவேண்டுமென்று டாக்டர் பராஞ்சபே ஒரு தீர்மானங்கொண்டுவந்தார். ஆனால் அதற்கு எதிர்ப்பும் வந்தது அதாவது பெண்கள் வீட்டிலிருக்கவேண்டியவர்கள்; ராஜீய விஷயங்களில் கலந்து கொள்ளக்கூடாது; மேல் நாடுகளில் இம்மாதிரி பெண்களுக்கு சீர்திருத்தம் கொடுத்துவிட்டுத் தவிப்பது போல் இங்கிடவேண்டாமென்று. எதிர்வாதம் கிளப்பப்பட்டது. இதில் நடுநிலைமையுள்ள சில அங்கத்தினர் ஸ்திரீகள் முதிர்ந்த காலத்தில் எத்துறைகளிலும் ஈடுபடுவதினால் குற்றமில்லையெனக்கொண்டு 45 வயதிற்கு மேல்பட்ட ஸ்திரீகள் அபேக்ஷகராய் நிற்கலாமென்று திருத்தம் கொண்டுவந்தார்கள். கடைசியில் ஆதித்தீர்மானந்தான் நிறைவேறியது.

### இறந்தும் இருக்கிறவர்கள்.

பணங்தேடிப்பாரிலிருந்தவர்கள் தர்மிஷ்டிகள் தான். சென்னையில் பெரிய தனவந்தராயிருந்து இறந்தவர்களில் பச்சையப்பமுதலியார் ஒருவர் தான். எத்தனையோ பணக்காரர்கள் பிறந்து இறந்திருக்கிறார்கள். அவர்களுடைய பெயரும் சந்ததியும் புகழும் நமக்கு என்ன தெரிகிறது? ஆனால் பச்சையப்பர், கல்விக்காக தனது திரண்ட செல்வத்தை எல்லாம் அர்ப்பணம் பண்ணிவிட்டிறந்தார். அவருடைய சந்ததியும் அழிந்ததே யொழிய புகழுடம்பு இன்றும் என்றும் பச்சையப்பன் பச்சையப்பன் என்று நிலைநிற்கிறது. ஆகவே அவர் இறந்தும் இருந்தவராகிறார். பணந்தேடிபாரில் இருப்பது தாமத்தைக்கொண்டுதான். பம்பாயில் ஸர். வாடியா என்பவர் ஒரு ஆஸ்பத்திரிக்காக 16 லக்ஷம் ரூபாய் நன்கொடையாக அளித்திருக்கிறார். இனி இவருடைய பெயரும் புகழும் பம்பாயுள்ள மட்டும் நிலைநிற்கும். ஸர். வாடியா இப்பூமியில் பிறந்தார்; இனி இறப்பார். இறந்தாலுமென்ன? அவருடைய தர்மததால் என்றும் இருந்தவரேயாவர்.

### ஒரு அமெரிக்க மாதின் ஆற்றல்.

பெண்களும் ஆண்களைக் காட்டிலும் வீரம், தைரியம், முயற்சி முதலியவைகளில் தலைசிறந்தவராயிருந்தாலுங்கூட பெண் தன்மையான அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற இயற்கைக் குணங்கள் அவர்களை அடக்கிக்கொண்டிருக்கின்றன. இவ்வியற்கையான அடக்க ஒழுக்கங்களைத் தவிர்த்துக் கொண்டு மேல்நாடுகளில் பெண்கள் ஆண்களைப்போல் பல துறைகளிலும் உரிமை பாராட்ட தனிச் சிங்கம் மகாநாடு முதலிய கூட்டி தங்கள் சுதந்திர நோக்கங்களை வெகு துரிதமாய் பரவச் செய்துகொண்டுவருகிறார்கள். ஆகவே ஆண்கள் தங்களுக்குச் சமயம் வாய்க்கும் பொழுது, தங்களுடைய ஆற்றலைக் காட்டி வீரதீரபராக்கிரம புகழுடைவது போன்று, மேனாட்டுப்பெண்களும் இப்போது தங்களுடைய வீர பராக்கிரமத்தைக் காட்டி வெற்றிப் புகழடைய ஆரம்பித்திருக்கிறார்கள். இங்கிலாந்திற்கும் பிரான்ஸுக்கும் இடையிலுள்ள இங்கிலீஷ்கால்வாய் என்றசிறியகடலை

கொள்கையில் குருக்கள் குலத்தவர்களெல்லாம் இச்சட்டத்தை எப்படியும் கொன்றுவிடவேண்டுமென்று செய்யும் சூட்சிகளைத் தவிர்க்கமீண்டும் அடுத்தவாரத்தில் கூடப்போகும் சென்னை சட்டசபையில் கனம் பனகால்ராஜா ஆலோசனைகொண்டுவருவார். பிந்தியவிசாரணையின் பயனாகவும் இந்தியாக்கவர்ன்மெண்டார் யோசனையின் பயனாகவும் இந்த மசோதா இன்னும் பல சீர்திருத்தங்களுடன் நிறைவேறுமென்று நம்புகிறோம். ருசிகண்ட பூனைகள் செய்யும் எந்தச் சூட்சிக்கும் உருப்படாமற் போகுமென்பதில் என்ன சந்தேகம்?

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



## சென்னை மாகாண 1921-ஹு ஜனக்கணித ஆராய்ச்சி.

சென்னை மாகாணம் சுதேச சமஸ்தானங்கள் உள்பட 143,852 சதுர மைல்கள் அளவுள்ளது. இதில் 317 நகரங்களும், 52708 கிராமங்களுமுள்ளன. இதில் மொத்தம் 8416, 265 வீடுகள் இருக்கின்றன. நகர் பகுதியில் 961,750 வீடுகளும் கிராமப்பகுதிகளில் 7454515 வீடுகளும் இருக்கின்றன.

மாகாணம் முழுவதும் ஜனத் தொகை 42,794155. இதில் நகரவாசிகளின் தொகை 5364806 கிராமவாசிகளின் தொகை 37,439,349. 1911 ஹு ஜனக்கணிதப்படி மொத்த ஜனத் தொகை 41,870,160.

1901 ஹு-த்தில் 38,653,558.

1891 ஹு-த்தில் 36,064.408.

ஆகவே 1891 ஹுத்திலிருந்து 1901 ஹு வரையுள்ள ஒரு கணிதத்தில் 2589180 பேர்கள் அதிகமாயிருக்கிறார்கள். 1901 ஹு—1911 வரையும் 3216602 பேர்கள் அதிகப்பட்டிருக்கிறார்கள். 1911 ஹு—1921 வரை 923995 பேர்கள் கூடியிருக்கிறார்கள்.

இனி கிராமங்களின் எண்ணிக்கையும், நகரங்களின் எண்ணிக்கையும், அவைகளின் ஜனத் தொகைவாரியாக பிரித்து எழுதுவோம். சென்னை மாகாணத்திலேயே லக்ஷமும், லக்ஷத்திற்குமேல்பட்ட ஜனத் தொகையுடைய நகரங்கள் மூன்றிருக்கின்றன. அவையாவன:— சென்னை, மதுரை, திருச்சினாப்பள்ளி. சென்னைநகரில் மட்டும், ஜனத் தொகை 526911. மதுரையில் 138894, திருச்சினாப்பள்ளியில் 120422. இவைகளே முதல்தரமான நகரங்களாகும். இனி இரண்டாம் தரமான நகரங்கள். ஐம்பதாயிரத்திற்கு மேல்பட்டதும், லக்ஷத்திற்குள்பட்டதுமான ஜனத் தொகையுடையதாகும் இவ்வகையில் 13 நகரங்களிருக்கின்றன. மூன்றாம் தரமாக இருபதாயிரத்திற்குமேல்பட்டும் ஐம்பதாயிரத்திற்குட்பட்டதுமான ஜனத் தொகையுடைய நகரங்கள் 37 இருக்கின்றன. நான்காவது பத்தாயிரத்திற்குமேல் இருபதாயிரத்திற்குட்பட்ட ஜனத்தொகையுடைய நகரங்கள் 120 இருக்கின்றன. ஐந்தாவதாக, ஐயாயிரத்திற்குமேல் பத்தாயிரத்திற்குள்பட்ட ஜனத் தொகையுடைய நகரங்கள் 449 இருக்கின்றன. ஆறாவதாக, இரண்டாயிரத்திற்குட்பட்ட ஜனத் தொகையுடைய பெரிய கிராமங்கள் 4034 இருக்கின்றன. ஏழாவதாக, ஆயிரத்திற்கும் இரண்டாயிரத்திற்குமுட்பட்ட ஜனத் தொகையுடைய பெரிய கிராமங்கள் 8219 இருக்கின்றன. எட்டாவது ஐந்நூறுக்கு மேல் ஆயிரத்திற்குட்பட்ட ஜனத் தொகையுடைய கிராமங்கள் 10052 இருக்கின்றன. ஒன்பதாவது, ஐந்நூறுக்குட்பட்ட ஜனத் தொகையுடைய சிறிய கிராமங்கள் 30198 இருக்கின்றன. ஆக சென்னை மாகாணத்திலுள்ள கிராமங்களும், நகரங்களும் சேர்ந்து 53025 இருக்கின்றன.

---

6—8—26 காலை 7 மணிக்கு 19-வயதுள்ள ஒரு அமெரிக்கப்பெண், நீந்தி கடக்கக் கருதி, கிரிஸ் என்ற முனையிலிருந்து கிங்ஸ் டவுன் என்ற எதிர்க் கரைக்குபுறப்பட்டு இரவு 9-30 மணிக்குப் போய்ச் சேர்ந்தாள். இவள் நீந்திக்கொண்டுவருவதோடு நில்லாமல், கம்பியில்லாத் தந்தி இயந்திரத்தையும் கையுடனே வைத்துக்கொண்டு, அடிக்கடி சமாச்சாரங்களை அனுப்பிக்கொண்டும் அதன் மூலம் பல விஷயங்களை தானும் அறிந்துகொண்டே வந்தாள். ஒரு பெண் நீந்திவருவதாக இங்கிலாந்திலுள்ள கம்பியில்லாத் தந்தி ஸ்டேஷன்களின் மூலமாக அறிந்து, ஆங்காங்குள்ள ஜனங்கள், கிங்ஸ் டவுனை கோரகி ஆவலுடன் வந்து சேர்ந்தார்கள். நீந்தி வருபவளைக் காணுவதற்காக ஜனங்கள் மிகவும் பரபரப்புடன் கரையில் நின்றுகொண்டிருந்தார்கள். முழங்கால் ஜல அளவுக்கு அவள் வந்ததும் ஜனங்கள் மிக்க சந்தோஷ ஆரவாரக் கோஷ்டமிட்டு, எதிர்சென்று அவளைப் பிடித்துக் கரைக்குக்கொண்டுவந்து உபசரித்து வரவேற்றார்கள்.

---

## ஏசுநாதர் நீதிவாக்கியங்கள்.

(தேவிதாஸன் எழுதுகிறார்)

### தேவனுடைய ராஜ்யம்.

தேவனுடைய ராஜ்யம் பிரத்தியட்சமாய் வராது. இதோ-அங்கே என்று சொல்லப்படுவதற்கும் ஏதா விராது. இதோ தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள்ளிருக்கிறது. என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல. யோவா 18—36.

தேவனுடைய ராஜ்யம் குடிப்பதும் புசிப்பதுமல்ல: அது நீதியும், சமாதானமும் பரிசுத்தமுமுள்ள ஆவியாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது. இவைகளிலே கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்கிறவன் தேவனுக்குப் பிரியனும் மனுஷரால் அங்கீகரிக்கப்பட்டவனுமாயிருக்கிறான். ரோ 14—17—18.

பரலோக ராஜ்யம் நிலத்தில் புதைத்திருக்கிற பொக்கிஷத்துக் கொப்பாயிருக்கிறது. அதை ஒருமனுஷன் கண்டு மறைத்து அதைப்பற்றிய சந்தோஷத்தினாலே போய் தனக்குண்டான எல்லாவற்றையும் விற்று அந்த நிலத்தைக்கொள்ளுகிறான். மத் 13-44

## வருஷாந்தரக் கொண்டாட்டம்.

சிவகாசி, இந்துநாடார் விக்டோரியா உயர்தரக்கலாசாலையின் வருஷாந்தரக் கொண்டாட்டத்தின் சம்பந்தமான விளையாட்டுகளின் பரிசளிப்பு நடந்த 31—7—26 சனிக்கிழமை மாலை 4 மணிக்கு மேற்படி பாடசாலையின் பந்தடி மேடையில் இராமநாதபுரம் ஜில்லா கல்வி இலாகாத்தலைவரான மகா-ா-ஸ்ரீ டி. பி. கிருஷ்ணசாமி முதலியார் எம். ஏ. பீ. எல். அவர்களது கௌரவ அக்ராசனாதிபத்யத்தின் கீழ் நடைபெற்றது.

தெய்வ வணக்கம் ஆனதும் கனம் கல்வி இலாகாத் தலைவரவர்கள் பந்தய விளையாட்டில் ஜெயித்த மாணவர்களுக்குத் தரவாரியாக இனிய புஸ்தகங்களை இனாமாக வழங்கினர். பரிசு பெற்ற பாலர்களின்பரிசுத்தக் கூட்டத்தினிடையில சிற்சில பெண்மக்களும் குழுமியிருந்தன ரென்பது குறிப்பிடத்தக்கது.

பின்பு கனம் அவைத்தலைவரவர்கள் பரிசுபெற்றமாணவர்களை ஆசீர்வதித்து தேகாப்பியாசத்தின் நன்மைகளைப்பற்றிப் பேசும் போது அது தேகபலத்தை மாத்திரமேயல்லாமல் ஆத்ம பலத்தையும் அதிகரிக்கச் செய்யக்கூடிய தென்றபயன் விளக்கும்படி பேசினர். மேலும் அப்பாடசாலையின் நிர்வாகிகள் தங்களது விசேஷ கவனத்திற்கு உட்பட்ட மாணவர்களின் உடற்கூற்றுக் கல்வியபிவிருத்தியின் பொருட்டு வெகு தூரம் சிரத்தை எடுத்துக் கொண்டதைப் பற்றிப் பாராட்டிக்கூறினர்.

அதன் பிறகு அப்பாடசாலையின் கரஸ்பாண்டெண்ட் ஆகிய ஸ்ரீமான் கே. வ. எம். வ, காளியப்பநாடார் அவர்கள் எழுந்து, தமது மனமார்ந்த வந்தனத்தை கனம் அக்ராசனாதிபதியவர்களுக்குச் செலுத்தினர். அன்னவர்களால் கனம் சபைத்தலைவரவர்களுக்கு மாலை சூட்டப்பட்டதும், அச்சந்தோஷகரமான காலைபொழுதிற்கூடிய கூட்டம் கரகோஷத்துடனும் இராஜ வாழ்த்துடனும் சுமார் 6-30 மணிக்கு இனிது கலைந்தது,

பின்னர் இரவு 9-மணிக்கு ஷை பாடசாலையின் ஏழைமாணவர் சகாய நிதியின் சார்பாக மனோஹரன் என்ற சிறந்த தமிழ் நாடகம் கனம் கல்வி இலாகாத்தலைவரவர்களின் முன்னிலையிலேயே சகல ஆடம்பரங்களுடனும் செவ்வனே நடத்திக் காண்பிக்கப்பட்டது.

நடிப்போர் யாவரும் வயதில் இளைஞரும் அறிவில் முதியோருமாகலின் அவர்கள் தங்களது நடையுடைபாவனைகளினாலும் வீணை கானத்தையும் நாணுறச் செய்யும் தீங்குரலாலும் சபையோர் மனதை முற்றும் கவர்ந்து தம்வயப்படுத்தினர் என்று திருத்தங்கல் ஸ்ரீமான் அ. ச. பாவநாசம் அவர்கள் எழுதுகிறார்.

---

# சென்னை சட்ட சபை.

## எலெக்ஷன் வேண்டுகோள்.

வரப்போகும் சென்னை சட்ட சபை எலெக்ஷனுக்கு திருநெல்வேலி, இராமநாதபுரம் ஜில்லாக்களின் கிறிஸ்தவ தொகுதிக்காக நான் அபேட்சகராக நிற்கின்றேன். ஆகையால் ஷை ஜில்லாக்களிலுள்ள பிராட்டெஸ்டாண்ட், கத்தோலிக் நாடார்குல ஓட்டர்கள் அனைவரும், மற்றும் ஏனைய கிறிஸ்தவ ஓட்டர்களும் என்னை ஆதரித்து என்னுடைய எலெக்ஷனில் வெற்றி பெறுவதற்கு பூரணமாய் ஒத்துழைக்கும்படி அன்பாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு
தங்கள் ஊழியன்,
D. தாமஸ் நாடார்,
பாளையங்கோட்டை.

---

பரலோக ராஜ்யம் நல்லமுத்துக்களைத் தேடுகிற வியாபாரிக்கு ஒப்பாயிருக்கிறது. அவன் விலையுயர்ந்த ஒரு முத்தைக் கண்டு போய் தனக்குண்டான எல்லாவற்றையும் விற்று அதைக் கொள்ளுகிறான். மத் 13—45—46.

---

## நாடார் மஹாஜன சங்கம், மதுரை.

### ஸ்காலர்ஷிப் லாட்டரி 12—9—26-ல் நிச்சயமாய் பிரைஸ் எடுக்கப்பெறும்.

12—9—26-ல் பிரைஸ் எடுப்பதற்குரிய வழியில் நடவடிக்கைகள் வெகு வேகமாக நடந்து கொண்டிருக்கின்றன. பிரைஸ் எடுக்கப்பெறும் கீழப்பேட்டை ஹாலின் முன் சிங்காரக் கொட்டகை அமைக்கப்பெறுகிறது. எவ்வித மாறுதலுமின்றி அன்று பிரைஸ் எடுக்கப்பெறும். விற்பனைமீலீடுபட்டுள்ளோர் யாவரும் அடிக்கட்டைகளையும், ரூபாய்களையும் விற்கமுடியாத நிலைமையிலுள்ள புத்தகங்களையும் 30—8—26-க்குள் அனுப்பிவிடும்படி கேட்டுக்கொள்கிறோம்.

காரியதரிசிகள்.

---

## பலதிரட்டு.

### வயிற்றுக் கடுப்பு.

இரங்கூனில் வயிற்றுக் கடுப்பு என்ற நோய் அதிகமாய் பரவியிருக்கிறது. அநேகமாய் ஆஸ்பத்திரிகளில் எல்லாம்இவ்வியாதியஸ்தர்கள் அதிகமாய் வந்து கொண்டிருக்கிறார்களாம். சென்ற மே மீ 15 உ க்கு மேல் ஜூன் மீ 24 உ க்குள் 463 பேர் இவ்வியாதியால் பீடிக்கப்பட்டிறந்து விட்டார்களாம்,

---

### 10 வருஷம் கடுங்காவல்.

கல்கத்தாவில் மகமதிய வாலிபனொருவன், 13 வயதுள்ள பிச்சைக்காரப் பெண் ஒருத்தியைக் கற்பழித்ததற்கு 10 வருஷம் கடுங்காவல் தண்டனை யடைந்தான்.

---

### குற்றங்களின் குறைவு.

பர்மாவில் கவர்ன்மெண்டின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்ட முக்கிய குற்றங்களின் ஜாப்தா. இரண்டாவது கால் வருஷத்திற்கு வெளியிடப்பட்டிருப்பதில் கொள்ளை; கொலை, நரசோரம், தீ வைத்தல், ரயில் பாதையில் விஷமம் முதலிய குற்றங்களின் தொகை மொத்தம் 356. சென்ற வருஷத்தில் இதே காலத்தில் 499 ஆக விருந்தன. சென்ற வருடத்தில் கொலைக் குற்றம் மட்டும் 357. சில்லரைச் சண்டையில் கூட கொலை தாராளமாக நேர்ந்து விடுகிறதாம்.

---

### புதிய நோட்டுகள்.

இலங்கை அரசாங்கத்தார் சென்ற வாரத்தில் புதிய நோட்டுகள் வெளியாக்கி யிருக்கிறார்கள். இரண்டு ரூபாய் நோட்டுகள், ஐந்து ரூபாய் நோட்டுகள், பத்து ரூபாய் நோட்டுகள் முதலானவை இப்போது வெளிவந்திருக்கின்றன. இரண்டு ரூபாய் நோட்டு மாத்திரம் வேறொரு புதிய விதமாய் அச்சடிக்கப்பட்டிருக்கிறது. இந்த நோட்டின் பின் பக்கத்தில் ஒரு யானையும், இரண்டு மூன்று தென்னை மரங்களும் காணப்படுகின்றன. இதுபோலவே ஐந்து ரூபாய் பத்து ரூபாய் நோட்டுகளும் ஒருவரும் அச்சடிக்க இயலாதபடி செய்யப்பட்டிருக்கின்றன.

---

### மதுரை, தெற்குவாசல் நாடார் வித்தியாபிவிருத்தி சங்கம் 12-வது ஜெனரல்மீட்டிங்.

இச்சங்கத்தின் 12-வது ஜெனரல் மீட்டிங் 11—8—26 புதன்கிழமை மாலை 7-30 மணிக்கு நாடார் வித்தியாசாலை சென்ட்ரால்ஹாலில் வக்கீல் ஸ்ரீமான் எ. பொன்னையா நாடார் பி. ஏ. அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் கூடியது. இம்மீட்டிங்கின் முக்கியமான நோக்கம்காலஞ்சென்ற ஸ்ரீமான் கா. ஆண்டியப்ப நாடார் அவர்களுக்குப்பதிலாக ஒரு புது மானேஜரையும், இரண்டு வைஸ்பிரசிடெண்டுகளையும் தேர்ந்தெடுப்பதாதலால், காலஞ்சென்ற மானேஜரவர்களின் வேலையையும் சிறந்தநற்குணங்களையும், அவரது தியாக புத்தியையும் பற்றி முறையே ஸ்ரீமான்கள் எ. பொன்னையாநாடார், பி. ஏ., வ. அ. எமநாடார், எம். ஆர். எம். சங்கரலிங்கநாடார், விசுவாச உபாத்தியாயர், எம். ராஜரத்தினம்பிள்ளை முதலியவர்களால்பேசப்பெற்றது மன்றி தாங்கள் இனி தேர்ந்தெடுக்கப் போகும் நபர்கள் அன்னார் போன்ற குணங்கள் வாய்த்திருக்க வேண்டுமென பேசினார்கள்.

பின்பு வித்யாசாலை மானேஜர் பதவிக்கு ஸ்ரீமான் மூ. வைரவநாடாரவர்களையும், வைஸ்பிரசிடென்டுகள் ஸ்தானத்திற்கு ஸ்ரீமான்கள் அ. ஆறுமுக நாடாரவர்களையும், ஏ. சி. சின்னையா நாடாரவர்களையும் அங்கத்தினர்கள் ஏகமனதுடன் தேர்ந்தெடுத்தனர் என்று காரியதரிசி ஸ்ரீமான் வ. அ. எமநாடார் எழுதுகிறார்.

நாடார்குல மித்திரன். 1926 ஆகஸ்டு மீ 23உ

## ஸூட்சும உலகத்தில் நடப்பதென்ன?

### மரணத்திற்குப் பின் ஜீவவாழ்க்கை.

ஸூட்சும உலகத்திலிருந்து செய்திகள் தருவிப்பதில் அதி நிபுணரான ஸ்ரீமான் வி. டி. ரிஷி. பி. ஏ. பி. எல். ஜூலை 11-ந் தேதி சாய்ரா என்ற பட்டணத்தில் ஸூட்சும உலக வாழ்க்கையைப்பற்றி ஒரு ரஸமான பிரசங்கம் செய்தார்.

ஸ்ரீமான் ரிஷி தமது உபந்யாசத்தில் சொன்னதாவது:- இந்த ஆத்ம ஞான விஷயத்தில் நான் தலையிடுவதற்குக் காரணமாயிருந்தது எனது மனைவியின் மரணந்தான். என்னுடைய மூத்த மனைவியிடத்தில் எனக்கு அளவு கடந்த பிரியம். ஆகையால் அவள் இறந்த பிறகு, ஸூட்சும உலக வியவகாரங்களை யறிவதில் எனக்குத் தானாகவே ஒரு சிரத்தையேற்பட்டது. என்னுடைய அன்புக்குப் பாத்திரமான அவள் தன்னுடைய தேகத்தை விட்டு நீங்கிய பின் எங்கே, எவ்வாறு, வாழ்கிறாள் என்று அறிய எனக்கு ஒரு தூண்டுதல் ஏற்பட்டது. டாக்டர் அனிபெஸண்டையும் வேறுபல பிரம்ம ஞான உபதேசிகளையும் கண்டு பேசினேன். ஆனால் அவர்களுடைய கூற்று எனக்குத் திருப்தியுண்டு பண்ணவில்லை, கடைசியாக ஸர். ஆலிவர் லாட்ஜ் முதலியோர் எழுதிய நூல்களைப் படித்தேன். பிரஸ்தாப விஷயத்தில் கொஞ்சம் சிரத்தையுண்டாயிற்று. மேலே மேலே அதைப்பற்றித் தெரிந்த ஐரோப்பியர்களும் அமெரிக்கர்களும் எழுதியுள்ள புத்தகங்களை வாங்கிப்படித்தேன். அநேக வருஷ காலம் இவ்வாறு படித்து, அப்பியாசம் செய்து பார்த்தேன். அதன் பிறகு தான் என்னுடைய (செத்துப்போன) மனைவியின் ஸூட்சும சரீரத்துடன் பேச முடிந்தது. சுமார் 7 வருஷ காலம் இதற்காக நான் பல நூல்களைப் படிப்பதில் மிகவும் சிரமம் எடுத்துக் கொண்டேன்.

மரணத்துக்குப் பிறகும் நமக்கு வாழ்வுண்டு என்ற சித்தாந்தம் ஹிந்து மதத்தாருக்குப் புதிதல்ல. ஒவ்வொரு ஹிந்துவின் மனதிலும் அந்த எண்ணம் ஊறிக்கிடக்கின்றது. ஆனால் ஸூட்சும சரீரிகளை எப்படிக் கண்டு பேசுவது என்று தெரியவில்லை. மனிதர்கள் இறந்த பிறகு அவரவர் இந்த உலகத்தில் செய்த கர்மங்களுக்கேற்றபடி, அவர்களுடைய ஆத்மாக்களுக்கு வெவ்வேறு பிரதேசங்களில் இடம் ஒதுக்கித்தரப்படுகிறது. மறுபடி இன்னொரு கூடு அகப்பட்டு, மீண்டும் ஜனனமாகும் வரையிலோ, அன்றி பகவானிடத்தில் ஐக்கியமாகும் வரையிலோ ஆத்மாக்கள் அந்தந்த இடங்களிலே தாமதிக்கவேண்டியது தான்.

ஒரு மனிதன் செத்தவுடனே வேறிடத்தில் பிறந்து விடுகிறான் என்பது உண்மையல்ல. சிலர் இறந்து போன சில மாதங்கள் கழித்துப் பிறப்பதுண்டு. சிலர் சிலவருஷங்கள் கழித்துப் பிறப்பதுண்டு. சிலர் நூற்றுக்கணக்கான வருஷங்கள் கழித்துப் பிறப்பதுண்டு. ஒரு தடவை சில நூற்றாண்டுகளுக்கு முன் இறந்துபோன கிராம்வெல் என்றவருடைய தலைமையின் கீழ் வேலை செய்த ஒரு தளகர்த்தரின் ஆத்மா என்னுடன் பேசவந்தது. இதிலிருந்து, ஒருவன் உயிரோடிருக்கிற காலத்திலும் சரி, செத்த பிறகும் சரி, ஒரே அளவுள்ள ஆயுள் இடையாது. சிலர் பிறந்தவுடனே செத்துப் போகிறார்கள். சிலர் 20 வயது 30 வயதில் சாகிறார்கள். சிலர் 100 வருஷத்துக்குமேலும் வாழ்கிறார்கள். ஸூட்சும சரீரத்தின் ஆயுள் காலமும் அப்படித்தான்.

ஸூட்சும சரீரிகளுடன் பேசியதிலிருந்து, அவர்களுக்குப் பிரத்தியேகமாக உலகங்கள் இருக்கின்றனவென்று தெரியவருகிறது. அவர்கள் இருக்கிற விடத்திலும் பள்ளிக்கூடங்கள், கலாசாலைகள், தேவாலயங்கள், மாதாக் கோயில்கள் இருக்கின்றன. முஸ்லீம்களுடைய ஆத்மாக்கள் தங்களுக்குரித்தான பள்ளிவாசல்களில் தொழுகின்றன. கிறிஸ்தவர்கள் தங்களுடைய மதத்தையும், முஸ்லீம்கள் தங்களுடைய மதத்தையும், தாங்கள் போகிறவிடத்திற்கு எப்படிக்கொண்டுபோக முடியும் என்று நீங்கள் ஆச்சரியப்படலாம். ஆனால் அதில் ஆச்சரியம் எதுவுமில்லை. நமது ஜன்மாந்திர வாஸனை எங்கு போகும்? இந்த உலகத்தில் நம்மைச் சூழ்ந்துள்ள எண்ணங்களும் சந்தர்ப்பங்களும் எப்படி ஒன்றுமில்லாமல் போகும்? அந்த வாஸனை இருந்து கொண்டுதான் இருக்கும். ஸூட்சும உலகம் என்பது இந்த உலகத்தின் தொடர்ச்சிதான். ஆகையால் இங்கு நாம் எப்படி வாழ்கிறோமோ அது போல் ஸூட்சும உலகத்திலும் ஆத்ம உருவமடைந்து, அதே எண்ணங்களைக் கொண்டிருக்கிறோம். இத்துறையில் நன்றாகப் படித்து அப்பியாசித்தால்தான் உங்களுக்கு உண்மை விளங்கும்.

## தூரதிருஷ்டி.

ராஜாவில் இங்கிலாந்திற்குச் சென்றிருக்கும் வங்காள கவர்னரான லார்டு லிட்டன் அவர்களுக்கு நமது இளவரசர் பேட்டி கொடுத்தார்.

காலஞ்சென்ற லார்டு கர்ஸனுக்கு அவருடைய மாஜி சகாக்களும் நண்பர்களும் சேர்ந்து வெஸ்ட்மினிஸ்டர் அபேயில் ஞாபகசின்னம் ஏற்படுத்த ஒரு நிதி திரட்டியிருக்கிறார்கள்.

பிரான்ஸில் நாய்வில்லிசெக் என்ற இடத்திற்கும் ரோஸ்னியென்ற இடத்திற்கு மிடையில் அதிவேகமாய் ஓடிக்கொண்டிருந்த மெயில்வண்டி தண்டவாளத்தைவிட்டு அகன்றதினால் 4 பேர் கொல்லப்பட்டனர்; 16 பேர்களுக்கு பலத்தகாயம். பாழ்தான இடத்தில் 35 மைல் வேகத்தில் போகவேண்டியவண்டி 75 மைல் வேகத்தில் போனது தான் விபத்திற்குக்காரணமெனக் கூறப்படுகிறது.

பர்ஷியாவில் 146-வயதுள்ள மீனு என்ற ஒரு குடியான ஸ்திரீ இன்னும் உயிரோடிருக்கிறாள். அவளுக்கு 117 வயதுள்ள ஒரு மகளும் உயிரோடிருக்கிறாளாம். இந்த தேசத்தில் இப்போது தான் முதல் முதலாக ஜனக்கணிதம் எடுத்தார்களாம். அதிலிருந்து மேற்கண்டவிபரம் விளங்குகிறதாம்.

கொரியாவில் கடல் பொங்கி மூன்று கிராமங்களை சமீபத்தில் அடியோடு அழித்திருந்தது. அதற்குள் அத்தேசத்தில் கனத்த மழைபெய்து பல்லாயிரக்கணக்கான ஏக்கர் விளைவு நிலத்தில் வெள்ளம் தேங்கிநிற்கிறதாம். சுமார் 75 பேர்வரை மரணமாயினர்களாம்.

ஆஸ்திரேலியாவில் வசிக்கும் பிரிட்டிஷ் இந்தியர்களை முதுமைப் பருவத்தில் கொடுக்கப்படும் பென்ஷனுக்கு அருகதையாக்கக்கூடிய மசோதா ஒன்றை நிறைவேற்றியிருக்கிறார்கள்.

8 டன் நிறையுள்ள சுத்த வெள்ளி நார்வேயிலிருந்து இங்கிலாந்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது.

கொரியாவில் வெள்ளச் சேதத்தினால் விளைவு நிலங்கெட்டு பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் ஜப்பான் கவர்ன்மெண்டார் 10 லக்ஷம் கொரியா ஜனங்களுக்கு பஞ்ச நிவாரண வேலை செய்ய ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே ஜப்பானிலிருந்து ஏராளமான உணவுப் பொருள்கள் இலவசமாக ஏற்றுமதி செய்யப்படுகின்றனவாம்.

சீனாவில் ஷாங்கே பட்டணத்தில் பிரஞ்சுக்காரர்கள் வசிக்கும் பேட்டைகளில் சீனாக்காரர்கள் தெரு வீதியில் படுத்துத் தூங்கக்கூடாதென்று உத்தரவு போட்டிருக்கிறார்களாம். கோடைகாலங்களில் சீனாக்காரர்கள் வீதிகளின் ஓரங்களில் இரவில் படுத்துத் தூங்குவது வழக்கமாம்.

தற்பொழுது கம்பியில்லாத் தந்தியந்திரத்தின் உதவியைக்கொண்டு மனிதர்களது முகமும் காட்சிகளும் தூரத்திலுள்ள இடங்களில் பிரதிபிம்பிக்கும்படி செய்யப்பட்டிருக்கின்றன. தற்பொழுது 200 மீட்டர் தூரத்திலுள்ள இடங்களுக்குள் இவ்வாறு செய்யமுடிகிறது.

## சாத்தான்குளம்.

### கிளைக்கான்பரென்ஸ் நடத்த யோசனை.

(ஒரு நிருபர் எழுதுகிறார்.)

திருநெல்வேலி ஜில்லா திருச்செந்தூர் தாலூகா சாத்தான்குளம் என்னும் ஊரில் நம்மவர்கள் மிக்க நன் மதிப்புடனும் பெருமையுடனும் வாழ்ந்து வருகின்றார்கள்.

1921-ம் ஆண்டில் ஓர் கிளைக்கான்பரன்ஸை ஸ்ரீமான்கள் டானியல் தாமஸ்நாடார், ஊ. பு. அ. சௌந்தர பாண்டியநாடார் ஆகிய இருகனவான்கள் தலைமையின் கீழ் மிக்க சிறப்புடன் நடாத்தி முடித்தார்கள். அதன் பயனாய் ஓர் கிளைச்சங்கத்தையும் ஏற்படுத்தி, சங்கத்திற்கென்று அரிய கட்டடம் ஒன்றும் நிர்மாணம் செய்தார்கள். ஆனால் என்ன காரணத்தாலோ கட்டடம் இதுவரையும் பூர்த்தியாகவில்லை.

திரும்ப மீண்டும் தற்போது கிளைக்கான்பரென்ஸ் நடத்தவேண்டுமென்றும், கட்டடத்தை பூர்த்தி செய்ய வேண்டுமென்றும் சமூக க்ஷேமத்தைக் கோரி தக்கவர்கள் கிளர்ச்சி செய்து முன்னேற்றத்தின் நன்னாளை எதிர் பார்க்கும் அவர்கள் முன்னிற்கும் செய்தி தோன்றியிருக்கிறது. கிளைக்கான்பரென்ஸ் நடத்த தீவிர ஆலோசனையும் நடைபெறுகிறது.

குலாபிமானிகள் எடுத்த கருமத்தை தொடுத்து நடத்தி முடிக்க எல்லாம் வல்ல பரம் பொருள் கிருபை செய்வாராக. மற்றும் விஷயங்களை குலாபிமானிகள் "மித்திரன்" மூலம் வெளியிடுவார்களாக.

## நாடார்கட்கோர் சாதனம்.

சான்றோர் குலப் பெரியோர்களே! நம் தாய்சங்கத்திற்கு இரண்டு லக்ஷம் ரூபாயில் லாட்டரி சீட்டு ஏற்படுத்தி இருப்பது நம்மில் அனைவருக்கும் தெரிந்த விஷயமே. குறிப்பிட்ட தினமாகிய ஜூன் மீ 30உயில் எடுப்பதாக இருந்தது கோரி ரூபாய் சேராமையால் நின்றுவிட்டது. காரணம் நம் குலத்தினர்கள் வேண்டியபடி பிரயாசை எடுக்காததைத் தவிர்த்து வேறென்ன சொல்வது. 13 லக்ஷம் ஜனத்தொகை கொண்ட நம் ஜன சமூகத்திற்கு இரண்டு லக்ஷம் பெரிதல்ல. தருமத்தில் கல்வியை தவிர்த்து வேறு சிறந்த தருமம் கிடையாது என்பது பெரும் பாலார்கொள்கை. இதை அறிந்தே நம் ஒளவைத்தாயார் "பிச்சை புகினும் கற்கைநன்றே" என்ற வாக்கை நமக்குச் சொல்லி இருக்கிறார்கள். இன்றே சீட்டுபுஸ்தகம் வாங்கி உங்களால் இயன்றளவு விற்பனை செய்து அடுத்து வரும் ஆவணி மீ 27உயில் குறிப்பிட்ட ரூபாய் சேர்த்து சீட்டு எடுக்கும்படி பிரயாசை எடுக்கவேண்டியது அவசியம். நன்று என்பதை இன்றே செய்யுங்கள். ஆடம்பரமாய் வாய்ப்பந்தல் போடுவதினும், காலத்தைபோக்குவதிலும் காரியம் கைகூடாது. ஏற்றகாலத்தை இழந்துவிடாமல் ஒவ்வொருவரும் எத்தனை சீட்டுகள் விற்பனை செய்யலாம் என்பதை அறிந்து இந்த வினாடியே ரூபாய் அனுப்பி சீட்டை பெற்று அதிகமான ரூபாயை பெறுங்கள். லாபத்தை இழந்து விடாதீர்கள். அதிஷ்டம் உங்கள் பக்கம் இருக்கிறது. இதுவே சமயம்.

ப. வ. சோமசுந்தரநாடார்,

(முகாம்) திருவாரூர்.

## நம்மவர் கடமை.

ஐயன்மீர்!

நமது சங்கத்தின் நோக்கங்களை நம்மவர்கள் எளிதிலுணரவும், நம்மவர்களுக்குள் புதியதோர் ஊக்கமும் முயற்சியும் உண்டாவதற்கு அனுகூலமாக ஏற்பட்ட "நாடார் மகாஜனவாரவைபவம்" கடந்த வாரத்தில் நடைபெற்றிருக்கின்றது. நமது சமூக முன்னேற்றமானது தற்கால நிலைமையில் மூன்றினுள் அடங்கியிருக்கின்றதாக கருதப்படுகிறது. "நமது பத்திரிகைகள்", "மகாஜன சங்கப் பொருளாதார நிலைமை", "ஸ்தல ஸ்தாபனங்களை நம்மவர்கள் கைப்பற்றுதல்" ஆகியவைகளே. ஆகவே நமது சமூகப் பத்திரிகைகளான "நாடார்குல மித்திரன்" "க்ஷத்திரியமித்திரன்" "நாடார் நண்பன்" ஆகியஇம்மூன்றின் க்ஷேமத்தை நாடி சந்தாதாரர்களைச் சேர்த்தும், க்ஷேமநிதி சேர்த்தும் கொடுக்க கடமைப்பட்டுள்ளோம். நாடார் மகாஜன சங்கம் நமக்கு எத்தகைய அவசியமோ, அதுபோன்று நமது சமூகப் பத்திரிகைகளுமாகும். குலாபிமானிகள் இதில் சிரத்தை கொள்வார்களா?

திரும்ப நமது மகாஜன சங்கம் பொருளாதார நிலைமையைக் கவனிக்குங்கால் "ஏழைமாணவர்கள் ஸ்காலர்ஷிப் லாட்டரி"யின் குறிப்பிட்ட தொகை நமக்கு சேரவேண்டிய பிரயத்தனம் நாம் இவ்வாரத்தில் செய்தாக வேண்டும். இதுமிகவும் பொறுப்பான வேலை. அபிமானிகள் கவனிப்பார்களா? மூன்றாவது ஸ்தல ஸ்தாபனங்களை நம்மவர்கள் கைப்பற்றுதல் என்ற கோட்பாட்டில் தற்போது நாம் செய்யவேண்டிய பிரதான வேலை, வரப் போகும் சட்டசபைத் தேர்தலைப் பற்றியதே.

திருநெல்வேலிஜில்லா கிராமத் தொகுதிக்கு அபேட்சகராக நிற்கும் ஸ்ரீமான் அரி. அ. சு. துரைச்சாமிநாடார் அவர்களுக்கு பலமான போட்டியிருக்கிறது என்பதை அபிமானிகள் அறிவார்கள். ஆகவே நம்மவர்கள் அனைவரும் எலெக்ஷன் பிரசாரத்தில் ஈடுபட கிளர்ச்சி செய்யவேண்டுவது முக்கிய கடமையாகும். ஸ்ரீமான் டானியல்தாமஸ்நாடார் அவர்களுக்கு போட்டியாக தஞ்சைஜில்லா போர்டு பிரஸிடெண்டும், கத்தோலிக்மார்க்கத்தவரும், உடையார் ஜாதியைச் சேர்ந்தவரும், பாரிஸ்டருமான ஸ்ரீமான் ஏ. டீ. பன்னீர் செல்வம் நிற்கப் போகிறதாகத் தெரிகிறது. கத்தோலிக்ககுருக்கள் ஸ்ரீ பன்னீர்செல்வத்திற்காக வேலை செய்வதாய் வதந்தி உலாவுகின்றது. ஆகவே ஸ்ரீமான் டானியல்தாமஸ் நாடாரவர்கள் விஷயமாய் நம்மவர்கள் அனைவரும் ஊக்கமாயுழைத்து வெற்றியேற்படும்படி செய்வதும் முக்கிய கடமையாகும்.

அபிமானிகள் பிரஸ்தாபிக்கப்பட்ட மூன்று கடமைகளையும் சிரமேற்கொண்டு மெய்வருத்தம் பாராமல் கருமமே கண்ணாய்க் கொண்டுழைக்க மன்றாடுகின்றேனென்று நெல்லைவாசி ஒருவர் எழுதுகிறார்.





"எம்பயர் பாம்."

எல்லா நோய்களுக்கும் தேவாமிர்தம்.

The house hold remedy for all ailments is our "Empire Balm"

ஏஜெண்டுகள் தேவை.

புட்டி 1-க்கு ரூபாய் 0-8-0

டசன் 1-க்கு ரூ 5-0-0

விபரத்திற்கு:- எம்பயர்பாம், மனுபாக்சரிங் கம்பெனியென்ற விலாசத்திற்கு எழுதித்தெரியவும். கீழமாரட்டு வீதி, மதுரை

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



## ஸத்திய தரிசனம்.

### மஹாத்மா காந்தியின் ஜீவிய சரித்திரம்.

2-வது பாகம்.
அத்தியாயம் 12.

மகாத்மா காந்தி தமது அனுபவங்களைத் தொகுத்து "யெளவன இந்தியா" பத்திரிகையில் எழுதிவருவதில் தென்னாப்பிரிக்கா இந்தியருடன் முதல் முதலாக அவர் பழக ஆரம்பித்த விருத்தாந்தத்தைப் போன வாரம் சொல்லியிருக்கிறார். அந்த அத்தியாயம் பின்வருமாறு:—

கிறிஸ்தவ நண்பர்களுடன் நான் சகவாஸம் செய்ய நேர்ந்த விவரத்தைப் பற்றி மேலே எழுதமுன் அதே காலத்தில் எனது மற்ற அனுபவங்கள் என்னவென்று எடுத்துச் சொல்ல வேண்டியது அவசியம்.

நேடாலில் தாதா அப்துல்லாவுக்கு எவ்வளவு அந்தஸ்து உண்டோ, அந்த அளவுக்கு ஸேத் தியாப் மொஹிமான் முகமது க்கும் ப்ரிடோரியாவில் உண்டு. அவர் சம்பந்தப்படாத பொது நல இயக்கம் கிடையாது. அவர் உதவியில்லாமல் எந்த இயக்கமும் நடவாது. நான் போய்ச் சேர்ந்த முதல் வாரத்திலேயே அவரை சிநேகம் செய்து கொண்டேன். ப்ரிடோரியாவிலுள்ள ஒவ்வொரு இந்தியரையும் நான் காண விரும்புவதாக அவரிடத்தில் தெரிவித்தேன். இந்தியரின் நிலைமையைப் பற்றி நான் அறிந்துகொள்ள விரும்பினேன். தம்மால் கூடிய உதவியை எனக்குச் செய்வதாக அவர் வாக்களித்தார்.

ப்ரிடோரியாவில் எல்லா இந்தியரையும் ஒன்று கூட்டி வைத்தோம். டிரான்ஸ்வால் நிலைமையைப் பற்றி அவர்களுக்கு எடுத்துச் சொல்ல விருப்பம். ஸேத் ஹாஜி ஜூஸப் அவர்களுடைய வீட்டில் மேற்படி கூட்டம் நடந்தது. மேமன் வியாபாரிகள் தான் முக்கியமாக வந்திருந்தனர். சில ஹிந்துக்களும் காணப்பட்டனர். ப்ரிடோரியாவில் ஹிந்துக்களுடைய தொகை மிகவும் குறைவு.

மேலே சொல்லிய கூட்டத்தில் நான் செய்த பிரசங்கந்தான் என்னுடைய வாழ்வில் முதலாவது பிரசங்கம். வியாபாரத்தில் ஸத்தியமாக நடந்து கொள்ளவேண்டிய அவசியத்தை நான் வற்புறுத்தினேன். பேசுவதற்குத் தயார் செய்து கொண்டே நான் போனேன். வியாபாரத்தில் ஸத்தியத்திற்கு இடமில்லையென்று பல வியாபாரிகள் கூறக் கேட்டதுண்டு. ஆனால் எனக்கு அதில் நம்பிக்கையில்லை. மத விஷயத்தில்தான் ஸத்தியம் பிரதானமென்றும், வியாபாரத்துக்கு அது அஸௌகரியம் போலவும் பேசப்படுகிறது. நான் அன்று செய்த பிரசங்கத்தில் இதைக் கண்டித்து, வியாபாரிகளுக்கு அவர்களுடைய கடமையை ஞாபகமூட்டினேன். ஓர் அன்னியநாட்டில் சொற்பத் தொகையினராயுள்ள இந்தியர்கள் நாணயக்குறைவாக நடந்துகொண்டால் இந்தியாவின் நல்ல பெயரை அது கெடுத்துவிடுமென்று சொன்னேன். ஆங்கிலேயர்களைப்போல் தென்னாப்பிரிகா இந்தியர்கள் அங்கு சுத்தமாக வாழவேண்டுமென்றும், ஹிந்து முஸ்லீம் கிறிஸ்தவர் மதராஸ்காரர் சூரத்காரர் என்ற வித்தியாசம் பாராட்ட வேண்டாமென்றும் நான் கேட்டுக்கொண்டேன். இந்தியர் கட்டுப்பாடாக ஒருசங்கம் அமைந்துகொண்டு தங்கள் குறைகளுக்கு நிவர்த்தி மார்க்கம் தேடும்படி கடைசியாக வற்புறுத்தினேன். கூட்டத்திற்கு வந்தவர்களின் மனதில் எனது பிரசங்கம் ஆழ்ந்துபதிந்தது. பிறகு சிறிது நேரம் விவாதம் நடந்தது. சிலர் சில முக்கியமான தகவல்களை அதனிடையே தெரிவித்தனர். எனக்குத் தைரியம் உண்டாயிற்று. என்னுடைய பிரசங்கத்தைக் கேட்டவர்களில் பலருக்கு ஆங்கிலம் தெரியாதென்று நான் கண்டுகொண்டேன். ஓய்வுள்ளவர்கள் ஆங்கிலம் கற்கும்படி சொன்னேன். நானே பாடஞ் சொல்லிவைக்கத் தயார் என்று தெரிவித்தேன் தங்களுடைய வீட்டுக்கு வந்து நான் சொல்லித் தந்தால் ஆங்கிலம் படிக்கத் தயார் என்று 3 சிறுவர்கள் தெரிவித்தனர். அதில் இருவர் முஸல்மான்கள். மூன்றாவது நபர் ஒரு சின்னக்கடைக்காரர். நான் சொல்லித்தருவதாக ஒப்புக்கொண்டேன். ஆங்கிலம் போதிக்க எனக்குத் திறமை யுண்டென்று தோன்றிற்று. மாணவர்கள் அலுப்புற்றுப்போனாலும் நான் அலுக்காமல் சொல்லித்தருவேன். சில சமயங்களில் அவர்களுடைய வீட்டுக்கு நான் போகும்போது அவர்கள் வேலையாயிருப்பார்கள். நான் அலுத்துக்கொள்வதில்லை. பொறுமை யிழப்பதில்லை. 8 மாத காலத்தில் இரண்டு பேர் சுமாராக ஆங்கிலம் கற்றுக் கொண்டார்கள். கணக்குப்போடவும் கடிதம் எழுதவும் அவர்கள் கற்றுக்கொண்டு விட்டனர். மற்றவர் நாவிதர். வாடிக்கைகாரர்களோடு பேசுவதற்கு எவ்வளவு ஆங்கிலங்கற்க வேண்டுமோ அந்த அளவோடு அவர் நின்றுவிட்டார். அவரை விட நன்றாகக் கற்றுக்கொண்ட மற்ற இருவருக்கும் நல்ல வரும்படி கிடைத்தது.

மாதத்துக்கொரு தடவையாவது தவறாமல கூட்டம் நடப்பது வழக்கம். ப்ரிடோரியாவில் ஒரு இந்தியர் கூட பாக்கியில்லாமல் எல்லாரையும் நான் சிநேகஞ் செய்துகொள்ள இதன் மூலம் ஒரு சந்தர்ப்பமேற்பட்டது. ப்ரிடோரியாவில் பிரிட்டிஷ் ஏஜண்டான மிஸ்டர் ஜாகோபஸ் டிவெட் என்றவரைப் பார்த்துப் பேசி அவரோடு சிநேகம் செய்து கொள்ள எனக்கு ஆவல் உண்டாயிற்று. இந்தியரிடத்தில அவருக்கு அபிமானமுண்டு. ஆனால் அவருக்கு அங்கே செல்வாக்கில்லை. இருந்தபோதிலும் தேவையானபோது தம்மைவந்து காணும்படி அவர் எனக்குச் சொன்னார்.

ரயில்வே அதிகாரிகளுக்கு எழுதி, ரயில்வேச் சட்டத்தின்படி இந்தியரை அவமானமாக நடத்த இடமில்லையென்றும், ரயில்வேக்காரரின் நிர்ப்பந்தங்கள் இந்தியருக்குக் கஷ்டம் விளைவிக்கின்றன வென்றும் நான் சுட்டிக்காட்டினேன். அதற்கு வந்த பதிலில் இந்தியர் சரியாக உடுத்துச்சென்றால் 1, 2-வது வகுப்புகளுக்கு டிக்கெட் கொடுபடுமென்று கண்டிருந்தது. ஆனால் சரியாக அல்லது ஒழுங்காக உடுத்துவதென்றால் என்ன அர்த்தம்? ஒரு ரயில்வே அதிகாரி தன்னிஷ்டப்படி எவனையாவது "ஒழுங்காக உடுத்தவில்லை" யென்றகாரணம் சொல்லி டிக்கட் கொடுக்க மறுத்துவிடலாம்.

பிரிட்டிஷ் ஏஜண்டு என்னிடம் காண்பித்த சில கடிதங்களிலிருந்தும் தியாப் சாயபு கொடுத்த சில தகவல்களிலிருந்தும், 'ஆரஞ்சு ப்ரீஸ்டேட்' என்ற மாகாண இந்தியர்களும் பல கொடுமைக் காளாவதாகத் தெரிய வந்தது. இவ்வாறு நான் இந்தியரைப் பற்றித் தெரிந்து கொண்ட தகவல்கள் எனக்குப் பிற்காலத்தில் மிகவும் உபயோகமாயிருந்தன. அவ்வருஷக் கோடியிலேயே நான் ஊருக்குத் திரும்பி விடலாமென்று நினைத்திருந்தேன் ஆனால் தெய்வஸங்கல்பம் வேறாயிருந்தது.

---

## எலிமெண்டரி பாட ரத்தினங்கள்.

ஸிவிக்ஸ், நேச்சர் ஸ்டடி ஸயன்ஸ். அடங்கியது. எல்லாப் பாடசாலைகளுக்கும் உபாத்திமாருக்கும் மிகவும் அவஸியம். 3-ம் பதிப்பு விலை அணா 14. இது ஆசிரியரிடமும், சென்னைவேப்பேரி, எஸ். பி. ஸி. கே. டிப்போவிலும் கிடைக்கும்.

### ஜேம் வக்கபிளரி.

இங்கிலீஷ் தமிழ் முதல் புஸ்தகம் 6 அணா; 2-ம் புஸ்தகம் 8 அணா. 6 மாதத்தில் இங்கிலீஷ் பேச எழுத லேசாய்க்கற்க எல்லாருக்கும் மெத்த அவஸியம். ஒரு நேர்த்தியான லெட்டர் ரைட்டரும் அடங்கும். இது ஆசிரியர் நாகபட்டணம் மிஷின் ஹைஸ்கூல் ஆசிரியர் எஸ். வி. கோயில்பிள்ளையிடமும் ஆர்ணி மிஷின் பிரஸிலும், ஷை சென்னை எஸ். பி. ஸி. கே. டிப்போவிலும் கிடைக்கும். உபாத்திமாருக்கும் வியாபாரிகளுக்கும் 12 ஜதைக்குமேல் விசேஷித்த கமிஷன்.

---

## க்ஷத்திரியகுல
## சன் மார்க்க பூஷணம்.

இதுவரையும் அநேகர் எதிர்பார்த்துக் கொண்டிருந்த க்ஷத்திரியகுல சன்மார்க்க பூஷணம். தயாராய்விட்டது. சொற்பகாப்பிகள்தான் அச்சிடப்பட்டிருக்கின்றன. ஏற்கனவே நூற்றுக்கணக்கான ஆர்டர்கள் கைவசமிருக்கின்றன. வேண்டுவோர் விரைவில் எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

**புத்தகம் 1-க்கு விலை அணா 4.**

டஜன் 1-க்கு ரூ 2—8—0. நூற்றுக்கு 20 புத்தகம் அதிகம் சேர்த்துக்கொடுக்கப்படும். வி. பி. சார்ஜ் வேறு 1, 2. புஸ்தகங்கள் வி. பி. யில அனுப்பப்படமாட்டாது. புஸ்தகம் 1-க்கு 4½ அணா ஸ்டாம்பு அனுப்பினல் புக் போஸ்ட்டில் அனுப்பப்படும்.

விலாசம்:—

"நாடார்குல மித்திரன்" புத்தகசாலை.
அருப்புக்கோட்டை.

---




## ஒரே ரூபாய்.
### அநேக நற்சாக்ஷி பெற்ற அருந்ததிகூந்தல்வளரும் பரிமளத் தைலம்.

முகப்பரு தைலம்.

எப்பேர்ப்பட்ட முகப்பருக்களையும் ஒரே புட்டியில் குணமாக்கிவிடும். நல்ல பரிமளமாய் இருக்கும். உபயோக முறை மருந்தோடனுப்பப்படும். விலை அணா 8. வி. பி. தபால் சார்ஜ பிரத்தியேகம் இன்றே ஆர்டர் செய்யுங்கள்,

| | |
|---|---|
| சோல் ஏஜெண்டு. மா ஞா. ஞானமுத்து நாடார், NO 34. மலாய வீதி கும்பனி தெரு, கொளும்பு. | விலாசம்:— ஏ. என். நாடார், ஜெயலக்ஷிமி அண்டுகோ சோளவரம், செங்கை |

குறிப்பு:—எங்களிடம் ஆர்டர் செய்கிறவர்களுக்கும், செய்திமார் கிறவர்களுக்கும் 1920-ம் வருஷத்திய அழகிய காலண்டர் இனுவரு அனுப்பிவருகிறோம். காலண்டர் மாத்திரம் தனியாய் வேண்டுகேய் ஒரு அணா ஸ்டாம்பு அனுப்பி பெற்றுக்கொள்ள வேண்டியது.

---

ஜெகமெங்கும் புகழ் பெற்ற
அசல் சேட்
இ. பி. குமரவேல்



நயம் பீடிகள்

அன்பிற் சிறந்த கனவான்களே!

நாம் எல்லோரும் வெகு நாளாக நமது அசல் சேட் இ. பி குமாரவேல் பீடிகளை தவிர மற்ற போலி பீடிகளை உபயோகப்படுத்த மாட்டோமென்பது நிச்சயமாய்த் தெரிந்தும் சிலர்கள் போலி பீடிகளைக் கொண்டு ஊர் தோறும் பல பல பெயர்கள் சொல்லி விற்பனை செய்கிறார்கள்.

ஆனதால் நமது அசல் சேட் இ. பி. குமரவேல் பீடி கட்டுகளில் ஒட்டி இருக்கும் லேபில்களை கவனமாய்ப் பார்த்து இ. பி. குமரவேல் பீடிதானு என்று கவனித்து வாங்கி உபயோகப்படுத்தி ஆனந்தியுங்கள்.

புரோப்ரைட்டர்ஸ்,

### இ. பி. குமரவேல் பீடி கம்பெனி

பிராஞ்சுகள்:—

| | |
|---|---|
| செகன்ருபாத்து, ஐதருபாத்து & கொல்லம் | ஹெட்டாபீஸ், முக்கூடல். |

மேலே குறிப்பிட்ட எங்கள் பிராஞ்சுகளில் நயம் பீடி பல தரங்கள் தயார்செய்து தூர தேசங்களுக்கு V. P. மூலமாயனுப்பி பெரும் கியாதியோடு நடந்தேறிவருகிறது. வேண்டியவர்கள் விபரம் எழுதி கேட்கவும்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



# HAKEEM, K. MOHAMED YOOSOOF

MUHAMMEDIA MEDICAL HALL

PORTO-NOVO, S. A. Dt. [India]

ஓ நண்பர்களே!

நமது வைத்தியசாலைக்கு நேரில் வந்து பணத்தைப்பற்றி கவனிக்கவேண்டாம். தாதுபுஷ்டிக்காக முதல்தரமானலேகியம். வேணுமென்றுகேள்க்கும் கனவான்களுக்குமட்டும் இதை தனியாகச்செய்து கொடுத்துவந்தோம். இப்போது எல்லா ஜனங்களும் இதன் சுகத்தை அடையும்படி இப்பத்திரிகை மூலமாய் வெளிப்படுத்தி இருக்கிறோம்.

உலகத்தில் வெளிவந்திருக்கும் லேகியங்களுக்கெல்லாம் மகுடம்

## இராஜ தத்துவ லேகியம்.

இழந்து போனபலத்தையும் தளர்ந்து போன நரம்புகளையும் ஒரே வேளை லேகியம் சாப்பிட்டவுடன் அதிக உற்சாகத்துடன் பலத்தை செலுத்துவதில் இதற்கு சமமாய் எதைக்காட்ட முடியும்!

இந்தலேகியம் சாப்பிடுகிறவர்கள் இதற்கு சமமானலேகியம்காட்டுவார்களானாலும் சரி அல்லது இதில் சொல்லப்பட்ட குணங்கள் அவ்வளவாக இல்லையென்று ரூபிப்பார்களானாலும் சரி அவர்களின் பணம் திருப்பிகொடுத்து விடப்படும்.

உத்தரவாதமுள்ள சத்திய ஒளஷதம்.

வீரிய தத்துவத்தையும் நாடி நரம்பு தாதுகளின் உற்சாகத்தையும் கொடுத்து தேக காங்கையினால் நீர்த்துப்போகும் தாதுஸ்கலிதத்தையும் சொப்பனஸ்கலிதத்தையும் 2 வேளை மருந்தில் குணப்படுத்தும். மூளையைபலப்படுத்தி ஞாபகசக்தியைதரும். பற்பலவாய்வுரோகம், இடுப்புவலி, ஜலகாலாந்தி, பிமேகம், மலச்சிக்கல் இவைகளை சுகப்படுத்த வல்ல முதல் தரமான மருந்தென்று தங்கள் சிநேகிதர் பால் புகழ்ந்து பேசுவீர்கள் சந்தேகமில்லை.

முழுராத்தல் கொண்ட டப்பி 1-க்கு விலை 10—0—0

அரைராத்தல் கொண்ட டப்பி 1-க்கு விலை ரூபா 5—0—0

கால்ராத்தல் கொண்ட டப்பி 1-க்கு விலை ரூபா 2—12—0

வி. பி. செலவு வேறு.

நமக்கு நேரில் ஆர்டர் செய்தால் மட்டில் இந்தலேகியம் கிடைக்கும். மற்றவரிடம் கிடைக்காது.

விலாசம்:—

**ஹக்கீம், கா. முஹம்மது யூசுபு,**

முஹம்மதியா வைத்தியசாலை,

பரங்கிப்பேட்டை, தென்னாற்காடு ஜில்லா

---

## தாதுபுஷ்டிக்கு உலகப்பிரசித்திபெற்றது.

இதில் அசல் சாலாமிஸ்ரி பாதம், பிஸ்தா முதலிய உயர்தர சரக்குகளுடன் இன்னும் தாருட்ய சக்திக்கு முதன்மையான கஸ்தூரி அம்பர் விலையுயர்ந்த பஸ்ப செந்தூரங்களும சேர்க்கப்பட்டு அருமையாக தயார் செய்யப்பட்டது. இதை காலையும் மாலையும் சாப்பிட்டுவர எவ்வித காரணத்தினாலும் உடைந்துபோன காத்தை கெட்டிப்படுத்தி உலகின்ப விஷயத்திலே அதிரம்மியமான வீரிய உற்சாகத்தையும் நெடு நேரத்திய ஸ்தம்பனசக்தியையும் உண்டாக்கும் இரத்தவிர்த்திக்கும் தாருட்ய சக்திக்கும் பல ஹீனத்தை மாற்றுவதற்கும் இதற்கு நிகரானமருந்து இதுவேயன்றி வேறில்லை ஆனதை ஒரு தரம் பரீக்ஷித்தால்உண்மை விளங்கும்.

8 பலம் 20 நாள் சாப்பிட டின் 1-க்கு ரூ 5—0—0

5 பலம் 12 ரூ 3—0—0

வி. பி. தனி. நம்மிடம் சகல வியாதிகளுக்கும் யூனானி மருந்துகளுண்டு.

**MEERAALI & Co.**

PORTO-NOVO, S. A. DISTRICT.

மீரா அலி, கம்பெனி

பரங்கிப்பேட்டை, தென்னாற்காடுஜில்லா,

---

## ஜெயகாந்தரசம்.

எல்லாவியாதிகளுக்கும் கைகண்டமருந்து ஒவ்வொரு குடும்பத்திலும் அவசியம் இருக்கவேண்டியது. இது கைவசமிருப்பது ஒருநேர்மை தவைத்தியன் பக்கத்திலிருப்பதுபோலாகும்.

விலை புட்டி 1 க்கு ரூ 2

காந்தி சங்கம் உப அக்கிராசனர் ஸ்ரீமான் ஏ. ஈ. குணசிங்கம் எழுதுகிறார்:— "ஜெயகாந்த ரசத்தை உபயோகித்த அனுபவத்திலிருந்து அதை மிகவும் நல்லமருந்தென்று சொல்லுவேன்."

ஜனாப் அ. ம. முகம்மது சாலிஹு அவர்கள் எழுதுவதைக் கவனியுங்கள்:— "நெடுநாட்களாக டாக்டர் வரதராஜலு அவர்களின் மின்சாரரசத்தை உபயோகித்துவந்த யாம் அதற்குரிய சகல மேலான குணங்களும் ஜெயகாந்தரசத்திற் இருப்பதை பிரத்தியக்ஷமாயறிந்து சந்தோஷிக்கிறோம்."

## ஜெயாஞ்சனம்.

எல்லா நோவுகளையும் வலிகளையும் உடனே குணப்படுத்தும் ஒரு திவ்விய அஞ்சனம்.

விலை புட்டி 1 க்கு அணா 12

ஸ்ரீமான் ஜி. கே. சுந்தரம் அவர்கள் எழுதுவதைப் பாருங்கள்:— ஜலதோஷத்துக்கும் தலைவலிக்கும் ஜெயாஞ்சனை உபயோகித்ததில் அமிர்தாஞ்சன், ஓரியண்டல்பாம் போன்ற பிரக்கியாதி பெற்ற மருந்துகளுக்கு சமமாயும் மற்றும் அநேக பாம்களை விட பன்மடங்கு சிறந்ததெனவும் அனுபவபூர்வமாயறிந்தேன்."

நற்சாட்சிப்பத்திரங்கள் வந்துகொண்டேயிருக்கின்றன.

ஏஜெண்டுகள் தேவை. நல்லகமிஷன்.

K. மாணிக்கவாசகம்,

52, செட்டித்தெரு, கொழும்பு

எங்களிடம் கதர்ப் புடவைகளும் மற்ற சகலவிதமான ஜவுளிகளும் இருக்கின்றன. விலை சரசம்.

---

## உலகெங்கும் பெயர் பெற்ற

## ஸன்பிளவர் சோப்பு & ஸர்தார் சோப்பு.

சர்டிப் பிக்கேட்டுகள் பெற்றவை.

கோல்டு & சில்வர் மெடலிஸ்ட்




| | |
|---|---|
| துணிகளை வெண்மையாக்கக்கூடியது | நூல்களை கெடுதல் செய்யாதது |
| துர்நாற்றங்களை அகற்றக்கூடியது. | மனதிற்கு திருப்திகரமுள்ளது |
| மனோற்சாகத்தைத் தரக்கூடியது. | மாணவர் மனதைமகிழச்செய்வது. |
| மலிவான விலைக்கு கிடைக்கக்கூடியது. | நுரைகள் மிதக்கக்கூடியது. |
| குளிப்பதற்கு பரிமளமுள்ளது. | கெட்டரசாயனங்கள் சேராதது. |
| கோடைகாலத்திற்கு சுருக்கமில்லாதது | முழுதும் சுத்தமானது. |

குறிப்பு:— விசேஷ வருத்தமின்றி கொஞ்ச நேரத்தில் வஸ்திரங்கள் தோயக்கப்படும். கடினமான நீரிலும், மிருதுவான நீரிலும், குளிர்ந்த நீரிலும், சுடு நீரிலும், மழை நீரிலும், ஊற்று நீரிலும் உபயோகிக்கலாம்.

வஸ்திரத்தின் அழுக்கைப் போக்கவும் குளிப்பதற்கும் குளிர்ந்த வாசனையோடு கூடிய சோப் வேண்டுமானால்,

ஸன் பிளவர் சோப்புகளை எப்போதும் உபயோகியுங்கள்.

கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதினால் விலை விபர ஜாப்தா அனுப்புவோம்.

பிராஞ்சு ஆபீஸ்:- அம்மன் சந்நிதி, விட்டவாசல், மதுரை.

V. K. அன் ஸன்,

சவுத் இந்தியன்பிஸ்கட் & சோப் மேனிபாக்சரர்ஸ்.

கீழமார்க்கட்டு நல்லமநாயுடுசந்து, மதுரை.

---



## ராம்சேட், த. பி. சொக்கலால் பீடி.

ஐயன்மீர்! இஃது உலகமெங்கும் பிரசித்திபெற்று உலவிவருகிறதென்பதை நாம் சொல்லாமல் அறியக்கூடும். தற்போது சில போலிப் பேர்வழிகள் மட்டப்புகையிலையை வாங்கி பீடி சுத்தி நோட்டீஸ்களை தடபுடலாக ஒட்டி பப்ளிக் செய்துவருகிறார்கள். என்னதான் செய்தாலென்ன?

சிறுத்தை பருத்தாலும் சிங்கமாகிவிடுமா?

கட்டொன்று காலணாவென்று விலை கூறினாலும் மட்டப்பீடிகளை வாங்குவாருண்டோ? அரையணாவானாலும் அதற்குமேலானாலும் குணங்கண்டவர்கள் நமது ராம்சேட் த. பி. சொக்கலால் பீடியை மறக்கமாட்டார்களென்பது நிச்சயம்! நிச்சயம்! நிற்க.

புலியைப்பார்த்து நரி வரிச்சூடு போட்டுக்கொண்டதுபோல மற்றவர்கள் செய்யும் வீண் ஆடம்பரங்களில் மயங்கிவிடாது உங்களுக்கும், உங்கள் வியாபாரத்திற்கும் நற்பெயர் கொடுக்கவல்லதும், சிகரெட்டுகளைவிட மேலான குணமுடையதும், சிறந்த நற்சாக்ஷிகள் பெற்றதுமான எங்கள் சொக்கலால் பீடியையே வாங்கி திருப்தியடைவதோடு, திருநெல்வேலிப்பாலம் எங்கள் பிராஞ்சுக் கடையில் தயாராகும் சுகாதாரத்திற்கேற்ற "சொக்கலால் மூண்லைட்" சோப்புத் தினுசுகளையும் வாங்கி உபயோகிப்பீர்களென எதிர்பார்க்கின்றோம். புரோப்ரைட்டர்,

த. பி. சொக்கலால், பீடித்தொழிற்சாலை, முக்கூடல்.

Printed and Published By S. A. Muttu Nadar at the Sri Muthumariamman Press Aruppukotta.